# ஆசிரியர்களுக்கான வழிமுறைகள்

## பைபிள் டைம் லெவெல் 1 மற்றும் 2

**B** தொடர்

பாடங்கள் 7 - 12

www.besweb.com

# ஆசிரியர்களுக்கான வழிமுறைகள்

பைபிள் டைம் பாடங்கள் முதன் முதலில் அஞ்சல் வழி கல்வியாகவே அறிமுகம் செய்யப்பட்டாலும், அஞ்சல் வசதியில்லாத பகுதிகளில் இந்த பாடங்கள் அதிகமாய் பயன்படுத்தப்படுவதால் அஞ்சல் வழியிலேயே இப்பாடங்களை கற்றுத்தருவதில் அநேக சிக்கல்கள் உள்ளன. விசேஷமாக ஆப்பிரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள சபைகளில் மற்றும் பள்ளிகளில் இந்த சிரமம் உள்ளது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக இந்த ஆசிரியருக்கான வழிமுறைகள் உருவாக்கப்படுகிறது. இந்த புத்தகத்தில் உள்ள ஆசிரியருக்கான வழிமுறைகள் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பாடங்களுக்கானவை, அதாவது வயது 5-10 வரை உள்ள பிள்ளைகளுக்கானவை.

பைபிள் டைம் பாடங்களில் உபயோகப்படுத்தப்படும் அதே வேதாகம பகுதியே இந்த ஆசிரியர் கையேட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடங்கள் வாராந்திர அடிப்படையில் பயன்படுத்தப்பட வேண்டியவை. ஏப்ரல் மாத பாடங்கள் ஈஸ்டரை பற்றியும், டிசம்பர் மாத பாடங்கள் கிறிஸ்துமஸ் பற்றியும் இருக்கும்.

சில பகுதிகளில் வாராந்திர பாடங்கள் **A** 4 லும் சில பகுதிகளில் **A** 5 புத்தகத்தில் 24 பாடங்களும் கொடுக்கப்படும். பொதுவாக ஆசிரியர் சபையிலோ அல்லது பள்ளியிலோ வைத்து ஒரு பாடத்தைக் கொடுப்பார், அது வீட்டுக்கு எடுத்து செல்லப்பட்டு மறுவாரம் திரும்ப கொடுக்கப்படும். அந்த மாத முடிவில் எல்லா பாடங்களும் திரும்ப பெறப்பட்டு ஆசிரியரால் திருத்தப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும், பின்னர் திரும்ப மாணவர்களிடம் கொடுக்கப்படும்.

புத்தகங்கள் சரியாக பயன்படுத்தப்பட்டால், ஒவ்வொரு வகுப்பு நேரம் முடிந்தவுடன், புத்தகங்கள் திரும்ப பெறப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும். பல நேரங்களில் அது சாத்தியப்படாது, எனவே அப்படிப்பட்ட நேரங்களில் மாணவர்களிடம் புத்தகங்கள் மாற்றி கொடுக்கப்பட்டு ஒவ்வொருவரும் தங்கள் நண்பனின் புத்தகத்தை திருத்தி மதிப்பெண் இடுவதற்கான இடம் உண்டு, மற்றும் மாணவரின் முன்னேற்றத்தைப் பற்றி குறிப்பு எழுதும் இடமும் உண்டு, புத்தகத்தின் கடைசியிலே 6 மாத கால மதிப்பெண் சதவீதத்தைக் குறிக்கவும் மாணவருக்குக் கொடுக்கும் படியான ஒரு சான்றிதழும் உண்டு.

## ஆசிரியருக்கான ஆயத்தம்

ஆசிரியருக்கு எந்த ஒரு சுதந்திரமுமில்லாமல் அவர்களுடையகருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் இருக்க எங்களுக்கு மனதில்லை. கீழ்க்காணும் குறிப்புகள் பைபிள் டைம் புத்தகங்களை அதிக ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த உதவும்.

கதையை நன்றாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்: வேதாகம கதையையும் பைபிள் டைம் பாடத்தையும் ஆசிரியர்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். பாடங்களை கற்றுக்கொடுக்கும் முன்னரே பாடங்களை ஆசிரியர்கள் செய்து முடித்திருக்க வேண்டும், பாடங்களை ஆயத்தம் செய்யும் போது வழிமுறைகளையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை புரிந்து கொள்ள வேண்டும்: ஒவ்வொரு பாடத்திட்டத்தின் ஆரம்பத்தில் “நாம் கற்றுக்கொள்வது” என்கிற ஒரு பகுதி உண்டு அதன் கீழ் 2 குறிப்புகள் உண்டு. இவைகள் தான் பிள்ளைகள் அன்றைய நாளில் ஆசிரியர் பாடத்தை எடுத்து முடித்த பின்பும், பாடப்புத்தக வேலையை செய்து முடித்த பின்பும் மாணவர்கள் கற்றுக்கொள்ள போகிற விசயங்கள். முதல் குறிப்பு பிள்ளைகள் பாடத்தை புரிந்துகொள்ள உதவும், இரண்டாம் குறிப்போ பிள்ளைகளை சிந்திக்கச்செய்வதும், பின்னர் அதை கடைபிடிக்கவும் தீர்மானம் எடுக்கவும் உதவும். இந்த குறிப்புகள் அன்றைய நாளில் கற்றுக்கொடுக்கும் முக்கிய சத்தியத்தின் சிறு குறிப்புகளேயாகும். ஆசிரியர்களும் இந்த குறிப்புகளை தங்கள் தனிப்பட்ட வாழ்வில் ஓப்பிட்டு சிந்தித்துப் பார்க்கலாம்.

**அறிமுகப்படுத்தவும்:** ஒவ்வொரு பாடத்திலும் பிள்ளைகள் அந்த சூழ்நிலையில் இருக்கும் போது அவர்களின் அனுபவங்கள் எப்படியிருக்குமோ அதை வைத்தே பாடங்கள் துவக்கப்படும். பாடங்களை துவக்க பிள்ளைகளோடு கலந்து ஆலோசிக்க சில கருத்துக்களை நாங்கள் கொடுத்துள்ளோம்.

**கற்றுக்கொடுக்கவும்:** ஒவ்வொரு கதையிலும் முக்கிய புள்ளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த கதைகளை கற்றுக்கொடுக்கும் போது அதை ரசிக்கும் விதமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் கற்றுக்கொடுக்கவும் மற்றும் இந்த புத்தகத்தை பிள்ளைகள் முன்பாக திறந்து பார்க்காமல் முன்னதாகவே கதையை நன்கு அறிந்து போதிக்கவும் வேண்டும் என நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம். பிள்ளைகள் கதையின் முக்கிய பாடத்தை நன்கு கற்றுக்கொண்டு தாங்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்தை நன்கு புரிந்து எடுக்க ஆசிரியர்கள் வாஞ்சிக்க வேண்டும். தேவைக்கு ஏற்றார் போல சில விளக்கங்களை நாங்கள் கொடுக்க முயற்சித்திருக்கிறோம். அவை இட்டாலிக்ஸ் வடிவிலே இருக்கும்.

**கற்றுக்கொள்ளவும்:** ஒவ்வொரு கதைக்கும் ஒரு முக்கிய வசனம் உண்டு. சில சமயங்களில் இரண்டு வசனங்களும் இருக்கும். மற்றொரு வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவை எப்பொழுதும் எளிமையாக கற்றுக்கொள்ளுகிற அளவிற்கே இருக்கும். வேதாகம முக்கிய வசனங்களை பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் அறிவிலே வளர்வதற்கு முக்கிய வசனங்களை அடிக்கடி ஞாபகப்படுத்துதல் அவசியம் என நாங்கள் நம்புகிறோம்.

**செய்து முடிக்கவும்:** ஒரு பள்ளியாக இருக்கும் பட்சத்தில், பிள்ளைகளுக்கு பாடத்தாள்களை செய்துமுடிக்கும் திறன் எவ்வளவு உண்டு என்பதையும், ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு எவ்வளவு தேவை என்பதையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். ஆனால், சில இடங்களில் ஆசிரியர் பாடப்பகுதியை சத்தமாக வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். சில பிள்ளைகள் தாங்களாகவே வாசித்துக்கொள்வார்கள். எவ்வித சூழ்நிலையானாலும் சரி, பிள்ளைகளின் கவனத்தை கட்டுக்குள் வைக்கவும், கேள்விகளை பற்றியக் குறிப்புகளை கவனிக்கவும் இதை செய்யலாம். பள்ளிகூடம் அல்லாத சூழ்நிலையிலே நீங்கள் பைபிள் டைமை பயன்படுத்துபவராயிருந்தால், நீங்கள் பிள்ளைகளோடிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், மற்றும் பாடங்களை செய்து முடிக்கும் போது மாணவர்களுக்கு அது சுமையாக இல்லாமல், தேர்வு போல இல்லாமல் சுவாரஸ்யமாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

**நினைவில் கொள்ளவும்:** எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம், கேள்வி பதில்கள் மூலமாகவும், நடித்து காட்டுதல் மூலமாகவும், பாடங்களை நன்கு கற்றுக்கொள்ளவும், நினைவில் கொள்ளவும் உதவி செய்ய முயற்சி செய்திருக்கிறோம்.

## முக்கிய வசனங்களைக் கற்றுக்கொடுத்தல்:

கற்றுக்கொடுக்கப்படும் வசனத்தை ஒரு தாளிலோ அல்லது போர்டிலோ சில வார்த்தைகளை தவிர்த்து எழுத வேண்டும். பிள்ளைகள் வசனத்தை மீண்டும் மீண்டும் வாசிக்க செய்ய வேண்டும். அவர்கள் சொல்ல சொல்ல மீதி வார்த்தைகளை அழிக்க வேண்டும். கடைசியிலே எல்லா வார்த்தைகளையும் அழித்து முடிவதற்குள் பிள்ளைகள் முழு வசனத்தையும் கற்றுக்கொள்வார்கள்.

## முக்கிய வசனத்தைக் கற்றுக்கொடுக்க,

a) ஹெங்க்மேன் விளையாட்டை போல, வசனங்களின் எழுத்துக்களுக்கு பதிலாக கோடிட்ட இடம் இட வேண்டும். அந்த வசனத்தில் எழுத்துக்களை கீழே எழுத வேண்டும். பிள்ளைகள் கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான வார்த்தைகளை கவனித்து எழுத வேண்டும்.

b) வேதாகமத்தை பிள்ளைகள் கையில் கொடுத்து சொல்லும் வசனத்தை அவர்கள் கண்டுபிடித்து வாசிக்க செய்ய வேண்டும்.

## காலத்திட்டம்:

பாட ஒழுங்கு: ஒவ்வொரு பாடத்திற்கும் பாடம் நடத்தும் ஒழுங்கை நாங்கள் தீர்மானித்துள்ளோம், ஆனாலும் ஆசிரியர்கள் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் அதை மாற்றிக்கொள்ளலாம்.

முன்னுரையும், கதை கூறுதலும் - ஏறக்குறைய 15 நிமிடங்கள் முக்கிய வசனம் கற்றுக்கொடுத்தல் - 5-10 நிமிடங்கள் பாடத்தாள் வேலையை முடித்தல் - 20 நிமிடங்கள் வினா விடை மற்றும் இதர வேலைகள் - 5-10 நிமிடங்கள்

இந்த முக்கிய வாசகத்தை ஞாபகம் வைக்கவும்.

“சொல்லுங்கள் ஒருவேளை மறந்துவிடுவேன்
காட்டுங்கள் அதை நான் ஞாபகம் கொள்வேன்
செய்ய வையுங்கள் நான் புரிந்துகொள்வேன்”

## பைபிள்டைம் பாடத்திட்டம்

| | நிலை 0 (பள்ளி செல்லுமுன்)<br>நிலை 1 (வயது 1-7)<br>நிலை 2 (வயது 8-10) | நிலை 3 (வயது 11-13) | நிலை 4 (வயது 14+) |
|---|---|---|---|
| **தொடக்க பாடங்கள்** | 1.தொடக்கபாடம்-அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி | 1.தொடக்க பாடம் - அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி | 1.தொடக்க பாடம் - அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி |
| **A தொடர்** | 1. படைப்பு<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. ஆபிரகாம்<br>6. ஆபிரகாம்<br>7. பேதுரு<br>8. பேதுரு<br>9. யாக்கோபு<br>10. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. படைப்பு<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. ஜெபம்<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. படைப்பு & வீழ்ச்சி<br>2. ஆதியாகமம்<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. கிறிஸ்தவ வாழ்க்கை<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| **B தொடர்** | 1. கிறிஸ்துவின்ஆரம்பகால வாழ்க்கை<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. உவமைகள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. இயேசு சந்தித்த மக்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. நற்செய்தி எழுத்தாளர்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானி<br>4. சிலுவை<br>5. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>6. யாக்கோபு & அவரது குடும்பம்<br>7. யோசேப்பு<br>8. அப்போஸ்தலர் 2:42 - முன்னே உள்ள வழி<br>9. மோசே<br>10. மோசே<br>11. நியாயப்பிரமாணம<br>12.கிறிஸ்துமஸ் கதை |
| **C தொடர்** | 1. தானியேல்<br>2. தொடரும் அற்புதங்கள்<br>3. இயேசு சந்தித்த மக்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத் & சாமுவேல்<br>6. தாவீது<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. யோனா<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சந்தித்த மக்கள்<br>3. தொடரும் அற்புதங்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. தேவன் பயன்படுத்திய மனிதர்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசுவின் கூற்றுகள்<br>3. கர்த்தருடைய வல்லமை<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. மேலும் பழைய ஏற்பாட்டு கதாபாத்திரங்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை |

B 7 கதை 1

யோசேப்பின் சகோதரர்கள் வந்துசேருகிறார்கள் - இந்தக் கதை தவறு செய்வதன் விளைவுகளைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தன் சகோதரர்களைப் பற்றி யோசேப்பு கண்ட கனவுகள் நினவாகின.<br>* நாம் செய்யும் தவறான செயல்கள் விரைவில் அல்லது பின்னர் நம்மைப் பிடிக்கும்.<br><br>**முக்கிய வசனம்: கலாத்தியர் 6: 7**<br>**வேத பாகம்: ஆதியாகமம் 42: 1-26** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | இதுவரையுள்ள யோசேப்பின் கதையை குழந்தைகள் இருவர் இருவராக சேர்ந்து விவரிக்கட்டும். இதுவரை நடந்த கெட்ட மற்றும் நல்ல விஷயங்களை அடையாளம் காண முயற்சிக்கவும். யோசேப்பின் சகோதரர்கள் அவனை எப்படி நடத்தினாலும் காரியங்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டன என சுருக்கமாகக் கூறுங்கள். ஆனால் கானான் தேசத்தில் அவனுடைய சகோதரர்கள் எப்படியிகிறார்கள்? முக்கிய வசனமாகிய எண்ணாகமம் 32: 23ஐ நினைவூட்டுங்கள். 'உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்.' |
| **கற்றுக்கொடுங்கள்** | * கானான் தேசத்திலோ மக்கள் பசியுடன் இருந்தார்கள். ஒரு பஞ்சம் நிலவியதால் மக்கள் சாப்பிட உணவு இல்லாமல் இருந்தனர். எகிப்தில் ஏராளமான உணவுதானியம் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாக யாக்கோபு கேள்விப்பட்டார். அவர் யோசேப்பின் சகோதரர்களிடம் எகிப்துக்குச் சென்று குடும்பத்திற்காக கொஞ்சம் உணவுதானியம் வாங்கிவரச் சொன்னார். யோசேப்பின் தம்பி பென்யமீன் தவிர மற்ற சகோதரர்கள் அனைவரும் சென்றனர். (ஆதியாகமம் 42: 1- 5)<br>* எகிப்தில், உணவை விற்கும் பொறுப்பில் யோசேப்பு இருந்தான். அவனது சகோதரர்கள் சென்றடைந்தவுடன் அவர்கள் அனைவரும் எகிப்தின் ஆளுநரான யோசேப்பை வணங்கினார்கள்! (ஆதியாகமம் 42: 6-7)<br>* தனது சகோதரர்கள் அவனை விற்குமுன் யோசேப்பு கண்ட கனவுகளை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். இப்போது கனவுகள் நிறைவேறிக்கொண்டிருந்தன.<br>* யோசேப்பு தனது சகோதரர்களைத் தெரியாதவனைப் போல பாசாங்கு செய்தான், அவர்கள் அவனை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவன் அவர்களை அந்நியர்களைப் போல நடத்தி, 'நீங்கள் ஒற்றர்கள்! நீங்கள் தேசத்தை உளவு பார்க்க வந்திருக்கிறீர்கள்!' என்றான். இது உண்மையல்ல என்று சகோதரர்கள் அவனிடம் சொன்னார்கள். அவர்கள் யோசேப்பிடம் தாங்கள் நேர்மையான மனிதர்கள், ஒரே மனிதனின் மகன்கள் என்று சொன்னார்கள். (ஆதியாகமம் 42: 8-20).<br>* அவர்கள் யோசேப்பை நடத்தின விதத்திற்காக தேவன் அவர்களைத் தண்டிக்கிறார் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். அவர்கள் பேசிக்கொள்வதை யோசேப்பு ஒட்டுக்கேட்டான். அவன் விலகிச்சென்று அழுதான். (ஆதியாகமம் 42: 21-24)<br>* யோசேப்பு தனது சகோதரர்களின் சாக்குகளில் தானியங்களை நிரப்பும்படி தனது ஆட்களுக்கு கட்டளையிட்டான். (ஆதியாகமம் 42: 25-26) |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்கவும். கலாத்தியர் 6: 7. பாவம் எப்போதும் நம்மை பிரச்சனையில் சிக்க வைக்கிறது என்பதை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* சகோதரர்கள் ஏன் எகிப்துக்கு வர வேண்டியிருந்தது?<br>* எகிப்தில் தானியத்தை விற்றது யார்?<br>* யோசேப்பின் சகோதரர்களுக்கு அவனை அடையாளம் தெரிந்ததா?<br>* யோசேப்பு தன் சகோதரர்கள்மீது என்னவென்று குற்றம் சாட்டினான்?<br>* அவர்கள் யாரை எகிப்துக்கு கொண்டு வர வேண்டும் என்று யோசேப்பு விரும்பினான்?<br>* எந்த சகோதரன் சிறையில் வைக்கப்பட்டான்?<br>* இவை அனைத்தும் தங்களுக்கு எதனால் நடக்கிறது என்று சகோதரர்கள் நினைத்தார்கள்? |

B 7 கதை 2

பென்யமீன் மற்றும் கெட்ட செய்தி - நம் பாவங்கள் எவ்வாறு கண்டுபிடிக்கப்படுகின்றன என்பதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தன் சகோதரர்கள் தன்னை எப்படி நடத்தியிருந்தாலும் யோசேப்பு அவர்களை நேசித்தான்.<br>* தேவன் நம் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார், தவறான செயல்களை மன்னிக்க விரும்புகிறார்.<br><br>**முக்கிய வசனம்: எபேசியர் 4: 32**<br>**வேத பாகம்: ஆதியாகமம் 42: 26 - 44: 13** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | நீங்கள் சகோதரர்களில் ஒருவன் என கற்பனை செய்து பாருங்கள், எகிப்திலிருந்து கானானுக்கு வீடு திரும்பும் வழியில் இருக்கிறீர்கள். நீங்கள் எப்படி உணருகிறீர்கள்? இப்போது, உங்கள் சாக்கைத் திறந்து, தானியத்தை மட்டுமல்ல, அதற்காக நீங்கள் செலுத்திய பணத்தையும் கண்டுபிடிப்பதை கற்பனை செய்து பாருங்கள்! யார் அதை இதில் வைத்தார்கள்? இது ஒரு பொறியா? நீங்கள் அதை திருடிவிட்டதாக எகிப்தில் ஆளுநர் நினைப்பாரா? மேலும் உணவுக்காக நீங்கள் எப்போதாவது எகிப்துக்குச் செல்லத்தான் முடியுமா? இதற்குப் பதிலாக, சில விளையாட்டுப் பொருட்களைச் (சாக்கு, உணவு மற்றும் பணம்) சேகரித்து குழந்தைகளுக்காக இதை நடித்துக்காட்டுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * சகோதரர்கள் தங்கள் கழுதைகள்மீது ஏற்றிக்கொண்டு வீட்டிற்கு பயணம் செய்தனர். வழியில், அவர்களில் ஒருவன் தானியத்திற்காக செலுத்தப் பயன்படுத்திய பணம் மீண்டும் தங்கள் சாக்குகளில் போடப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தான். அவர்கள் மிகவும் பயந்தார்கள்! (ஆதியாகமம் 42: 26-28)<br>* யோசேப்பு பணத்தை அவர்கள் சாக்குகளில் ஏன் திருப்பி வைத்தான் என்று குழந்தைகள் நினைக்கிறார்கள் என்று அவர்களைக் கேளுங்கள். யோசேப்புக்கு எதிரான பாவங்களால் இது நடந்தது என்று சகோதரர்கள் உணர்ந்ததை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள்.<br>* அவர்கள் வீட்டிற்கு வந்ததும் என்ன நடந்தது என்று தங்கள் தந்தையிடம் சொன்னார்கள். எகிப்தின் ஆளுநர் தங்களை உளவாளிகள் என்று குற்றம் சாட்டியதாக அவரிடம் சொன்னார்கள். பென்யமீனைத் தன்னிடம் அழைத்து வர வேண்டும் என்று அவன் விரும்பினான் என்று கூறினர். இதைக் கேட்ட யாக்கோபு, அவர்களுடைய பணமும்கூட சாக்குகளில் இருப்பதைக் கண்டு அவன் இன்னும் பயந்தான். (ஆதியாகமம் 42: 29-38) பென்யமீனை எகிப்துக்கு அனுப்ப யாக்கோபு அனுமதிப்பார் என்று நினைக்கிறீர்களா?<br>* காலம் செல்லச் செல்ல பஞ்சம் அதிகரித்து கொடிதாயிற்று. யாக்கோபின் குடும்பம் மீண்டும் பசியுடன் இருந்தது. அதிக தானியங்களை வாங்க எகிப்துக்கு திரும்பிச் செல்லும்படி அவர் சகோதரர்களைக் கேட்டார். தங்களோடுகூட பென்யமீன் இல்லாவிட்டால் அவர்களால் செல்ல முடியாது என்று யூதா அவரிடம் சொன்னான். பென்யமீனை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக அவன் தனது தந்தையிடம் சொன்னான். யாக்கோபால் எதுவும் செய்ய முடியவில்லை. அவர்களுக்கு சாப்பிட உணவு தேவைப்பட்டது. பென்யமீனை எகிப்துக்கு அழைத்துச்செல்ல ஒப்புக்கொண்டார். சகோதரர்களிடம் இரு மடங்கு பணத்தையும், ஆளுநருக்கு ஒரு பரிசையும் எடுத்துக்கொள்ளும்படி கூறினார். (ஆதியாகமம் 43: 1-14) எகிப்தின் ஆளுநரை எதிர்கொள்ள புறப்பட்டபோது சகோதரர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?<br>* மறுநாள் காலையில் சகோதரர்கள் தானியங்கள் நிறைந்த தங்கள் சாக்குகளுடன் கானானுக்குப் புறப்பட்டார்கள். இந்த நேரத்தில் யோசேப்பு தனது சிறப்பு வெள்ளி கோப்பையை பென்யமீனுடைய சாக்கில் வைக்க ஏற்பாடு செய்திருந்தான். கோப்பையைத் தேட யோசேப்பு தன் ஆட்களை சகோதரர்களுக்குப் பின்னால் அனுப்பினான். (ஆதியாகமம் 44: 1-13) |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்கவும். எபேசியர் 4: 32. 'மன்னிப்பு' என்ற வார்த்தையைப் பற்றி விவாதிக்கவும். தேவன் நம்மை நேசிக்கிறார், நாம் தவறு செய்ததற்காக வருந்துகிறோம் என்று சொன்னால் அவர் மன்னிக்க எப்போதும் தயாராக இருக்கிறார் என்பதை குழந்தைகளுக்கு விளக்குங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்காக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* சகோதரர்கள் தங்கள் சாக்குகளில் என்ன கண்டுபிடித்தார்கள்?<br>* பென்யமீன் எகிப்துக்கு செல்ல யாக்கோபு விரும்பினாரா? ஏன் போகக்கூடாது?<br>* பென்யமீனைக் கவனித்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டது யார்?<br>* பென்யமீனைப் பார்த்தபோது யோசேப்பு எப்படி உணர்ந்தான்?<br>* யோசேப்பு இன்னும் தன் சகோதரர்களை நேசித்தானா?<br>* கோப்பை யாருடைய சாக்கில் கிடைத்தது?<br>* மன்னிப்பது என்றால் என்ன? தேவனிடமிருந்து மன்னிப்பு நமக்கு தேவையா? ஏன்? |

B7 கதை 3

மன்னிப்பும் நற்செய்தியும் - நாம் ஒருவரையொருவர் எவ்வாறு மன்னிக்க வேண்டும் என்பதைப் பற்றியது இந்தக் கதை.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தன் சகோதரர்கள் தன்னை எப்படி நடத்தியிருந்தாலும் யோசேப்பு அவர்களை மன்னித்தான்.<br>* தேவன் நம் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார், நாம் செய்த தவறான செயல்களை மன்னிக்க விரும்புகிறார்.<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 45: 8**<br>**வேத பாகம்: ஆதியாகமம் 44: 14 - 45: 28** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | கூட்டத்தைக் கூட்டும் நபர்களைப் பற்றி பேசுங்கள் - எ.கா. ஒரு அரசு பார்வையாளர், ஒரு ஜனாதிபதி, ஒரு பிரதமர், ஒரு சந்தையில் பொருட்களை விற்கும் நபர், தெருவில் வேடிக்கை காட்டுபவர். எல்லோரும் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க விரும்புகிறார்கள் அல்லது பேசுவதைக் கேட்க விரும்புகிறார்கள். யோவான் யோர்தான் நதிக்கு அருகில் பிரசங்கிக்க ஆரம்பித்தபோதும் அப்படித்தான் இருந்தது. பாலைவனத்தில் வசித்து வந்த இந்த விசித்திரமான மனிதன் என்ன சொல்கிறான் என்று கேட்க ஒரு கூட்டம் கூடியது. **(மத்தேயு 3:4)** |
| **கற்றுக்கொடுங்கள்** | * சகோதரர்கள் யோசேப்பின் வீட்டிற்கு திரும்பி வந்தனர். அவன் தனது வெள்ளி கோப்பையை எடுத்ததற்காக அவர்களிடம் மிகவும் கோபமுள்ளவன்போல் நடித்தான். யூதா பேசினான். அவர்கள் குற்றவாளிகள் என்பதால் இந்த பயங்கரமான நிலைமை ஏற்பட்டது என்பதை அவன் அறிந்திருந்தான். ‘குற்றவாளி’ என்ற சொல்லை விளக்குங்கள். சகோதரர்கள் யோசேப்பின் ஊழியர்களாக மாற முன்வந்தனர். இருப்பினும், கோப்பை யாருடைய சாக்கில் கண்டுபிடிக்கப்பட்டதோ அவன் மட்டுமே தனக்கு வேலைக்காரனாக இருப்பான் என்று யோசேப்பு கூறினான். பென்யமீனை விட்டுச் செல்லவேண்டியிருக்கும்! (ஆதியாகமம் 44: 14-17)<br>* யூதா மீண்டும் யோசேப்புடன் பேசினான். பென்யமீன் வீட்டிற்கு வரவில்லை என்றால், அவனது தந்தை துக்கத்தால் இறந்துவிடுவார் என்று அவன் யோசேப்பிடம் கூறினான். யூதா பென்யமீனுக்கு பதிலாக இருக்க முன்வந்தான். (ஆதியாகமம் 44: 18-34) சகோதரர்கள் எப்படி மனதை மாற்றிக்கொண்டார்கள் என்பதைப் பற்றி விவாதிக்கவும். யோசேப்பை அடிமையாக விற்க வேண்டும் என்ற எண்ணம் இருந்த சகோதரனே இப்போது ஒரு அடிமையாக மாற முன்வந்தான்! தன் சகோதரர்கள் ஒருவருக்கொருவர் அக்கறை காட்டுவதை யோசேப்பு காண முடிந்தது.<br>* யோசேப்பு தனது சகோதரர்களிடம் உண்மையில் தான் யார் என்று சொல்ல நேரம் வந்துவிட்டது என்பதை அறிந்திருந்தான். அவன் தனது சகோதரர்களைத் தவிர மற்ற அனைவரையும் அறையை விட்டு வெளியேறச் சொன்னான், பின்னர் அவன், ‘நான் தான் யோசேப்பு’ என்று கூறினான். முதலில் சகோதரர்கள் கவலைப்பட்டனர். யோசேப்பு பழிவாங்க விரும்புவானோ? இருப்பினும், ஆரம்பத்தில் இருந்தே இவை அனைத்தும் தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தன என்று யோசேப்பு அவர்களுக்கு உறுதியளித்தான். பஞ்ச காலத்தில் அவர்களுடைய உயிரைக் காப்பாற்ற அவர்களுக்கு முன் தன்னை எகிப்தில் இருக்கும்படி தேவன் அனுப்பியிருந்தார் என்று யோசேப்பு சொன்னான். (ஆதியாகமம் 45: 1-8)<br>* பஞ்சம் இன்னும் ஐந்து வருடம் நீடிக்கப்போகிறது என்று யோசேப்பு அறிந்திருந்தான். தனது சகோதரர்களிடம் வீட்டிற்குச் சென்று என்ன நடந்தது என்று தங்கள் தந்தையிடம் சொல்லும்படி கேட்டுக்கொண்டான். பின்னர் அவர்கள் தங்கள் உடமைகள் அனைத்தையும் கட்டிக்கொண்டு எகிப்தில் வசிக்க வந்தார்கள். (ஆதியாகமம் 45: 9-28) |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். ஆதியாகமம் 45: 8. (வசனத்தின் முதல் பகுதியை மட்டும் பயன்படுத்தலாம்) யோசேப்பின் வாழ்க்கையில் நடந்தவை அனைத்தும் பஞ்ச காலத்தில் யாக்கோபின் குடும்பத்தை மீட்பதற்கான தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தன என்பதை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்காக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* பென்யமீனுடைய சாக்கில் என்ன கிடைத்தது?<br>* யோசேப்பு தனக்கு வேலைக்காரனாக யார் இருக்கவேண்டும் என விரும்பினான்?<br>* பென்யமீனுக்கு பதிலாக தங்க முன்வந்தவன் யார்?<br>* பென்யமீன் வீடு திரும்பாவிட்டால் யாக்கோபுக்கு என்ன நேரிடும்?<br>* தன் சகோதரர்களுக்கு மனமாற்றம் ஏற்பட்டது என்று யோசேப்புக்கு எப்படித் தெரியும்?<br>* யோசேப்பு தன் சகோதரர்களை மன்னித்தானா?<br>* நம்முடைய பாவங்களை தேவன் மன்னிக்க நாம் என்ன செய்ய வேண்டும்? |

B 7 கதை 4

எகிப்தில் ஒன்றாயிருக்கிறார்கள் - இந்தக் கதை நம் வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டத்தைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது**<br>* யோசேப்பு தனது தந்தை யாக்கோபுடன் மீண்டும் இணைந்தான்.<br>* நாம் அவரை முழுமையாக நம்பினால் மோசமான சூழ்நிலைகளில் இருந்து நல்லதை வெளி-யே கொண்டுவர தேவனால் முடியும்.<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 50: 20**<br>**வேத பாகம்: ஆதியாகமம் 46: 1-34** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | குழந்தைகளில் யாராவது எப்போதாவது வீடு மாறியிருக்கிறார்களா என்று கேளுங்கள். அவர்களில் யாராவது வேறு நாட்டிற்கு செல்ல வேண்டியிருந்ததா? இது எவ்வளவு மும்மரமான நேரம்! உங்கள் உடமைகள் அனைத்தையும் கட்டவேண்டும். இது அவர்களுக்கு எப்படி இருந்தது என்று குழந்தைகளிடம் கேளுங்கள். அவர்கள் கவலைப்பட்டார்களா ∴ உற்சாகமாக இருந்தார்களா?<br>யாக்கோபும் அவரது குடும்பத்தாரும் எகிப்திலுள்ள கோசேன் தேசத்திற்குச் செல்கிறார்கள் என்பதை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * யாக்கோபு (இஸ்ரவேல்) மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் தங்கள் உடமைகளை எடுத்துக்கொண்டனர். அவர்கள் தங்கள் கால்நடைகளை சேர்த்து எகிப்துக்கான பயணத்தை தொடங்கினர். வழியில் அவர்கள் பெயர்ஷெபா என்ற இடத்திற்கு வந்தார்கள், அங்கு அவர்கள் தேவனுக்கு பலிசெலுத்துவதற்காக நின்றார்கள். தேவன் அவர்களை எவ்வாறு கவனித்துக்கொண்டார் என்பதற்காக அவர்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருந்தார்கள்! (ஆதியாகமம் 46: 1)<br>* தேவன் யாக்கோபோடு ஒரு கனவில் பேசினார். எகிப்தில் வாழ்வதற்குப் பயப்பட வேண்டாம் என்று யாக்கோபிடம் சொன்னார். எகிப்தில், தேவன் யாக்கோபை ஆசீர்வதித்து யாக்கோபின் குடும்பத்தை ஒரு பெரிய தேசமாக மாற்றப்போகிறார். அவர் யாக்கோபுடன் இருப்பார் என்று உறுதியளித்தார். (ஆதியாகமம் 46: 2-4) தேவன் தம்முடைய வாக்குறுதிகளை எப்போதும் காப்பாற்றுகிறார் என்பதை குழந்தைகளுடன் கலந்துரையாடுங்கள்.<br>* யாக்கோபும் அவரது குடும்பத்தினரும் பெயர்ஷெபாவிலிருந்து குடிபெயர்ந்து எகிப்துக்கு வந்தார்கள். அவர்கள் எல்லாம் ஒரு பெரிய கூட்டம்! ஒட்டுமொத்தமாக இப்போது எகிப்தில் யாக்கோபின் குடும்பத்தில் 70 பேர் இருந்தனர்! (ஆதியாகமம் 46: 5-27)<br>* அவர்கள் அனைவரும் கோசேன் தேசத்திற்கு வந்தபோது,யோசேப்பு அவர்களைச் சந்திக்க வந்தான். இத்தனை வருடங்களுக்குப் பிறகு தனது தந்தையைப் பார்த்து அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவன் தனது தந்தையைத் தழுவிக்கொண்டு நீண்ட நேரம் அழுதான். பார்வோன் ராஜா அவர்கள் வந்ததைக் கேள்விப்பட்டான். அவன் அவர்களை வரவேற்று கோசேன் தேசத்தில் ஒன்றாக வாழ அனுமதித்தான். (ஆதியாகமம் 46: 28- 34)<br>* இந்த மகிழ்ச்சியான முடிவை குழந்தைகளுடன் கலந்துரையாடுங்கள். யோசேப்பைப் போலவே நல்ல காலத்திலும் கெட்ட காலத்திலும் நாம் தேவனை நம்ப வேண்டும் என்பதை விளக்குங்கள். நாம் அவரை முழுமையாக நம்பினால் கெட்ட சூழ்நிலைகளில் இருந்து நல்லதை வெளியே கொண்டு வர தேவனை நம்பலாம். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்பித்து விளக்குங்கள். ஆதியாகமம் 50: 20. முழு கதையையும் தொகுத்துக்கூற இந்த வசனத்தைப் பயன்படுத்தவும். சகோதரர்கள் யோசேப்புக்கு எப்படி தீமைசெய்ய முயன்றார்கள்? தேவன் இதை ஒரு நல்ல சூழ்நிலையாக மாற்றியது எப்படி? நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் தேவன் கட்டுப்படுத்துகிறார் என்பதை குழந்தைகள் புரிந்துகொள்வதை உறுதிசெய்யுங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்காக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* யாக்கோபின் குடும்பம் எங்கு குடியேறியது?<br>* பலிகளைச் செலுத்த அவர்கள் எங்கே நின்றார்கள்?<br>* தேவன் யாக்கோபுக்கு அளித்த வாக்குறுதிகள் யாவை?<br>* கோசேனுக்கு வந்தபோது அவர்களைச் சந்திக்க வந்தது யார்?<br>* யாக்கோபின் குடும்பத்தில் எத்தனை பேர் இப்போது எகிப்தில் வசித்து வந்தனர்?<br>* இந்தக் கதை மிகவும் சோகமான தொடக்கத்தைக் கொண்டிருந்தது. ஆனால் அது ஒரு மகிழ்ச்சியான முடிவைக் கொண்டிருக்கும்படி தேவன் அதை எவ்வாறு மாற்றினார்? |

B 8 கதை 1

ஒரு நோய்வாய்ப்பட்ட பெண்மணி - இந்தக் கதை கர்த்தராகிய இயேசுவின் வல்லமையைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* இயேசு தேவனுடைய குமாரன் என்பதால் மக்களை சுகமாக்கினார்.<br>* நம் வாழ்வில் நல்ல காரியங்களைச் செய்ய கர்த்தராகிய இயேசுவால் முடியும<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 10: 38**<br>**வேத பாகம்: லூக்கா 4: 38 - 44** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | இன்று ஒரு டாக்டராக இருப்பது எப்படி இருக்கும் என்பதைப் பற்றி பேசுங்கள்- நிறைய நோய்களைப் பற்றி தெரிந்துகொள்வது, மருந்தை பரிந்துரைப்பது, மிகவும் சுறுசுறுப்பாக இருப்பது, சில நேரங்களில் உதவ முடியும், ஆனால் சில சமயங்களில் இயலாது.<br>இன்றைய கதையில் நம் அனைவரையும் விட மிக அற்புதமான மருத்துவரைப் பற்றி அறியப் போகிறோம் என்பதை விளக்குங்கள் - அவர் கர்த்தராகிய இயேசு! |
| **கற்றுக்கொடுங்கள்** | * இயேசு ஜெப ஆலயத்தில் (தேவனைப் பற்றி அறிய யூதர்கள் சந்தித்த கட்டிடம்) மக்களுக்கு போதித்தார். அவர் ஒரு மனிதனைக் குணப்படுத்தியிருந்தார். இப்போது சில சீடர்களுடன் சீமோனின் வீட்டிற்கு வருகைபுரியும் நேரம். ஆனால் ஒரு சிக்கல் இருந்தது. சீமோனின் மாமியார் மிகவும் கடுமையான காய்ச்சலால் (இதன் பொருள் என்ன என்பதை விளக்குங்கள்) பாதிக்கப்பட்டிருந்தாள். காய்ச்சலால் அவள் எப்படி உணர்ந்திருப்பாள் என்பதை விளக்குங்கள் - மிகவும் சூடாகவும் உடல் முழுவதும் புழுக்கமாகவும் இருந்திருக்கும். இயேசுவால் அவளை குணப்படுத்த முடியும் என்று சீமோனும் மற்றவர்களும் அறிந்திருந்தார்கள், எனவே அவர்கள் இயேசுவை உதவி செய்யச் சொன்னார்கள். இயேசு உதவ முடியும் என்று அவர்கள் ஏன் நினைத்தார்கள்? (லூக்கா 4: 38)<br>* இயேசு உதவ தயாராக இருந்தார். அவர் அந்த அம்மாளின் கையைத் தொட்டு காய்ச்சலைக் கடிந்துகொண்டு அவளுக்கு உதவினார். திடீரென்று அவள் சுகமடைந்தாள், உடனே உணவு பரிமாற ஆரம்பித்தாள். இதற்குமுன் அவளுக்கு எந்த பிரச்சனையுமே இல்லாதது போல இருந்ததாள்! மக்கள் ஒருவருக்கொருவர் சொல்லியிருக்கக்கூடிய சில விஷயங்களைப் பற்றி சிந்திக்கும்படி குழந்தைகளிடம் கேளுங்கள். (லூக்கா 4: 39)<br>* அன்று மாலை சூரியன் மறைந்துகொண்டிருந்தபோது பலர் நோயாளிகளையும் பிரச்சினைகளில் உள்ளவர்களையும் இயேசுவிடம் கொண்டுவந்தனர். அங்கு எப்படிப்பட்ட நபர்கள் வந்திருக்கக்கூடும், மேலும் அவர்கள் ஏன் வந்தார்கள் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். அந்நாளின் முடிவில் இயேசு எப்படி உணர்ந்திருப்பார்? எவ்வளவு தாமதம் ஆனாலும், இயேசு இன்னும் அனைவருக்கும் நேரம் ஒதுக்கினார். அவர் ஒவ்வொருவரின் மீதும் கை வைத்தார். யாரையும் குணமாக்காமல் விடவில்லை. மக்கள் எவ்வாறு பதிலளித்தனர் என்பதை மீண்டும் ஆராயுங்கள். (லூக்கா 4: 40)<br>* மறுநாள் காலையில், இயேசு தம் பிதாவிடம் ஜெபிக்க ஒரு அமைதியான இடத்தைக் கண்டுபிடித்தார். ஆனாலும் மக்கள் அவரைத் தேடி வந்தார்கள்! அவருடைய அற்புதமான வல்லமையைப் பற்றி அவர்கள் அறிந்தார்கள். (லூக்கா 4: 42)<br>* இன்றும் கர்த்தராகிய இயேசு அக்கறை காட்டுகிறார், மக்களுக்கு உதவ விரும்புகிறார். நாம் அவரை நம்பத் தயாராக இருக்கும்போது அவர் நம் வாழ்வில் நல்ல காரியங்களைச் செய்ய முடியும். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். **அப்போஸ்தலர்10: 38.**<br>உங்கள் குழுவால் நிர்வகிக்க முடிந்த அளவுக்கு இந்த வசனத்தைத் தேர்ந்தெடுக்கவும். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* ஜெப ஆலயத்தில் இயேசு என்ன செய்து கொண்டிருந்தார்?<br>* இயேசு யாருடைய வீட்டிற்குச் சென்றார்?<br>* யாருக்கு காய்ச்சல் வந்தது?<br>* அவளை குணப்படுத்த இயேசு செய்த இரண்டு காரியங்கள் யாவை?<br>* அவள் குணமடைந்த பிறகு என்ன செய்தாள்?<br>* ஏன் மக்கள் அதிகம் அதிகமாய் இயேசுவிடம் வருகிறார்கள்?<br>* மறுநாள் காலையில் இயேசு செய்த முக்கியமான காரியம் என்ன?<br>* விடுபட்ட வார்த்தையை நிரப்பவும், ------------- இயேசு நன்மைசெய்கிறவராயும் சுற்றித்திரிந்தார். |

## B 8 கதை 2

ஒரு தொழுநோயாளி - இந்தக் கதை கர்த்தராகிய இயேசு நம்மை எவ்வாறு நேசிக்கிறார் என்பதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தொழுநோயாளியைக் குணப்படுத்தி இயேசு தமது அன்பைக் காட்டினார்.<br>* இயேசு நம்மை நேசிக்கிறார், நம் வாழ்க்கையை மாற்ற விரும்புகிறார்.<br><br>**முக்கிய வசனம்: லூக்கா 7: 22**<br>**வேத பாகம்: லூக்கா 5: 12 - 16** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | அவர்கள் அனுபவித்திருக்கக்கூடிய தொற்றுநோய்களைப் பற்றி குழந்தைகளிடம் கேளுங்கள், எ.கா. சிக்கன் பாக்ஸ், அம்மை. உற்சாகமான ஒன்றும் இல்லாமல் மற்றவர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டிய சூழ்நிலை எப்படியிருக்கும் என்தைப் பற்றி பேசுங்கள். இயேசுவின் காலத்தில், தொழுநோய் என்பது ஒரு பொதுவான தோல்நோயாகும், இது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரவக்கூடியது என்பதை விளக்குங்கள். அந்நோய் வந்தவர்கள் இனி தங்கள் குடும்பத்தினருடன் வாழவோ அல்லது வேலைக்குச் செல்லவோ முடியாது. இதற்கு எந்த சிகிச்சையும் இல்லை! |
| **கற்றுக்கொடுங்கள்** | * ஒரு நாள், மிகவும் மோசமான தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவன் இயேசுவிடம் வந்தான். அவன் இயேசுவின் முன் முழங்காற்படியிட்டு உதவிசெய்ய மன்றாடினான். அவன், “ஆண்டவரே, உமக்குச் சித்தமானால், நீர் என்னை சுகமாக்கலாம்” என்றான். இயேசுக்கு சித்தமானால், தன்னை குணமாக்கும் வல்லமை அவருக்கு இருக்கிறது என்பதை அந்த மனிதன் அறிந்திருப்பதை இது காட்டுகிறது. அம்மனிதனை குணமாக்க இயேசு தயாராக இருப்பாரா என்று ஊகிக்கவும். தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனுடன் ஏதாவது செய்ய இயேசு விரும்புவாரா? (லூக்கா 5: 12)<br>* நிச்சயமாக, அந்த மனிதனுக்கு உதவ இயேசு விரும்பினார். அவர் அவனை மிகவும் நேசித்தார், அவனுக்கு எந்தளவு உதவி தேவைப்பட்டது என்பதை அறிந்திருந்தார். இயேசு ஒரு அற்புதமான காரியத்தைச் செய்தார். அவர் தனது கையை நீட்டி, உண்மையில் அந்த மனிதனைத் தொட்டு, “எனக்குச் சித்தமுண்டு, குணமடைவாயாக!” என்றார். அந்த மனிதனைத் தொட்டதால் இயேசு தொழுநோயைப் பெறவில்லை, மாறாக அந்த மனிதன் உடனடியாக குணமடைந்தான். அவனது தோல் எப்படி மென்மையாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தது என்பதை விவரிக்கவும்; மேலும் அந்த மனிதனின் ஆச்சரியத்தையும் நன்றியையும் சிந்தித்துப்பாருங்கள். (லூக்கா 5: 13) இது மற்றொரு அற்புதம். நோயையும் மக்களின் வாழ்க்கையையும் மாற்ற இயேசு மீண்டும் தனது மாபெரும் வல்லமையைக் காட்டினார்.<br>* பைபிள் நம் பாவத்தை தொழுநோயுடன் ஒப்பிடுகிறது. பாவம் என்றால் என்ன, அது நம் வாழ்க்கையை எவ்வாறு கெடுக்கிறது என்பதைப் பற்றி பேசுங்கள். நாம் தவறான செயல்கள் செய்திருந்தாலும் கர்த்தராகிய இயேசு நம்மை நேசிக்கிறார். நாம் ஆயத்தமாக இருந்தால், அவர் நம்மை மன்னித்து, நம்முடைய பாவத்திலிருந்து நம்மை சுத்திகரிக்க முடியும். நம் வாழ்க்கையில் உள்ளான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.<br>* இயேசு அந்த மனிதனைக் குணப்படுத்திய பிறகு, அவன் தான் குணமானதை ஆசாரியனிடம் காட்ட போகவேண்டும் என்று சொன்னார். இனிமேல் அவனது வாழ்க்கை எவ்வளவு வித்தியாசமாக இருக்கும்? இயேசுவை சந்தித்த அந்த நாளை அந்த மனிதன் ஒருபோதும் மறக்க மாட்டான். (லூக்கா 5: 14) நம்முடைய பாவங்களை மன்னிக்கும்படி கர்த்தராகிய இயேசுவிடம் கேட்டால், அது நம் வாழ்நாளில் சிறந்த நாளாக இருக்கும். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். லூக்கா 7: 22. கர்த்தராகிய இயேசு மக்களின் வாழ்க்கையை மாற்றும் ஆறு வழிகளை இந்த வசனம் பட்டியலிடுகிறது. எல்லாவற்றையும் கிரமப்படுத்துவது ஒரு சவாலாக இருக்கலாம் - ஒவ்வொரு சொற்றொடருக்கும் ஒரு எளிய நடிப்பைப் பயன்படுத்த முயற்சிக்கவும் |
| **நினைவில்வையுங்கள்** | வினாடி வினாவுக்கு சரியா அல்லது தவறா முறையைப் பயன்படுத்தவும்.<br><br>* தொழுநோய் ஒரு தொற்றுநோய்.<br>* அந்த மனிதன் தனது குடும்பத்தினருடன் மட்டுமே இருக்க அனுமதிக்கப்பட்டான்.<br>* இயேசுவுக்கு முன்பாக அவன் முழங்காற்படியிட்டான்.<br>* இயேசு அவனை குணமாக்க முடியும் என்ற உறுதியோடு அந்த மனிதன் இருக்கவில்லை.<br>* இயேசு அவனைத் தொட்டார்.<br>* இயேசு தேவனுடைய குமாரன் என்பதால் அவனை குணமாக்க முடிந்தது.<br>* சில நிமிடங்களுக்குப் பிறகு அவன் குணமடைந்தான்.<br>* அவன் சென்று தன்னை ஆசாரியனிடம் காட்ட வேண்டியிருந்தது.<br>* நம் அனைவருக்கும் பாவம் என்ற நோய் இருக்கிறது. |

B 8 கதை 3

ஒரு உதவியற்ற மனிதன் - இந்தக் கதை கர்த்தராகிய இயேசு எவ்வாறு மன்னிக்கிறார் என்பதைப் பற்றியது

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* திமிர்வாதமுள்ள ஒரு மனிதனைக் குணப்படுத்தியதோடுஇ அவன் செய்த பாவங்களை மன்னிக்கவும் இயேசுவுக்கு அதிகாரம் இருந்தது.<br>* நம்முடைய பாவங்களை மன்னிக்க இயேசுவுக்கு அதிகாரம் இருக்கிறது.<br><br>**முக்கிய வசனம்: லூக்கா 5: 24**<br>**வேத பாகம்: லூக்கா 5: 17 - 26** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பள்ளியிலோ அல்லது வீட்டிலோ ஒரு நண்பனுக்கு உதவ அவர்கள் செய்யக்கூடிய காரியங்களைக் கூறுமாறு குழந்தைகளிடம் கேளுங்கள். அவர்களின் உதவியைப் பாராட்டுங்கள். இன்றைய கதையில்இ நான்கு நண்பர்கள் நடக்க முடியாத தங்கள் நண்பனை கர்த்தராகிய இயேசுவிடம் கொண்டு சென்றனா். முடிந்தால் அவர்கள் இதை எப்படி செய்திருப்பார்கள் என்பதை விளக்கிக்காட்ட உதவியாக ஒரு பாய் வைத்திருங்கள். அவர்கள் ஏன் அவனை இயேசுவிடம் அழைத்து வந்தார்கள்? ஆம்இ தங்கள் நண்பனைக் குணப்படுத்தும் வல்லமை இயேசுவுக்கு இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * இருப்பினும்இ இயேசுவிடம் செல்வது அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு எளிதானது அல்லஇ இயேசு சொல்வதைக் கேட்க ஏற்கனவே வீட்டிற்குள் கூட்டமாக நிறைய பேர் இருந்தனர். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்க நாமும் விரும்புவது முக்கியம். வாசல் வழியாக செல்ல இயலாதுஇ அதனால் அவர்கள் வீட்டின் பக்கவாட்டில் உள்ள படிக்கட்டுகளில் கூரையின் மீது ஏறிச் சென்றனர். இயேசு மட்டுமே உதவி செய்ய முடியும் என்பதை அவர்கள் அறிந்திருந்ததால் அவர்கள் எளிதில் விட்டுவிடப் போவதில்லை! கூரையில் ஒரு திறப்பு ஏற்படுத்தினர்இ அந்த மனிதனை இயேசுவின் பாதங்களுக்கு முன்னால் கவனமாகக் கீழே இறக்கப்பட்டதும் கீழே உள்ள வீட்டில் நிற்கும் மக்களுக்கு எப்படியிருக்கும் என்று கற்பனை செய்யும்படி குழந்தைகளிடம் கேளுங்கள். (லூக்கா 5: 18 -19)<br>* இயேசு அந்த மனிதனை எவ்வாறு குணப்படுத்துவார்? பேதுருவின் மாமியார் மற்றும் தொழுநோயாளியின் கதைகளில் அவர் எப்படி குணமாக்கினார் என்பதை நினைவுபடுத்தும்படி குழந்தைகளிடம் கேளுங்கள். ஆனால் இன்றைய கதையில்இ இயேசு அந்த மனிதனிடம் பேசினார்இ “நண்பாஇ உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன” என்றார். வீட்டில் இருந்தவர்களில் சிலர் கோபமடைந்தனர். இயேசு பாவங்களை மன்னிக்க முடியும் என்று அவர்கள் நம்பவில்லை. தேவனால் மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும் என்று அவர்கள் நினைத்தார்கள். இயேசு தேவனுடைய குமாரன் என்று அவர்கள் நம்பவில்லை. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். நமது எண்ணங்களையும் அவர் அறிவார்! (லூக்கா 5: 20 - 24)<br>* அந்த மனிதனின் வாழ்க்கையிலிருப்பதை அவர்களால் பார்க்க முடியாவிட்டாலும்இ அவனுடைய பாவங்களை அவர் உண்மையில் மன்னித்துவிட்டார் என்பதை அவர்களுக்கு நிரூபிக்க இயேசு விரும்பினார்! இயேசுவின் வல்லமையால் அந்த மனிதனின் கால்களை குணமாக்குவது மட்டுமல்லாமல்இ பாவங்களையும் மன்னிக்க முடியும்! வேறு யாருக்கும் இது போன்ற வல்லமை இல்லை! (லூக்கா 5: 24 - 26) |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். லூக்கா 5: 24.<br>கர்த்தராகிய இயேசுவுக்கு மற்றொரு பெயர் “மனுஷகுமாரன்” என்பதை விளக்குங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>☐ அந்த மனிதனுக்கு எத்தனை நண்பர்கள் இருந்தார்கள்?<br>☐ அந்த மனிதனிடம் காணப்பட்ட குறை என்ன?<br>☐ தங்கள் நண்பனை இயேசுவிடம் அழைத்துச் செல்வது ஏன் கடினமாய் காணப்பட்டது?<br>☐ அவர்கள் வீட்டிற்குள் எப்படி நுழைந்தார்கள்?<br>☐ இயேசு முதலில் அந்த மனிதனிடம் என்ன சொன்னார்?<br>☐ சிலர் ஏன் கோபமடைந்தார்கள்?<br>☐ அந்த மனிதனின் பாவங்களை மன்னித்ததை இயேசு எவ்வாறு காட்டினார்?<br>☐ கர்த்தராகிய இயேசு நமக்கு செய்யக்கூடிய மிக முக்கியமான காரியம் என்ன? |

B 8 கதை 4

இயேசு சந்தித்த மக்கள்: மத்தேயு - இந்தக் கதை கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* மத்தேயுவின் வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை இயேசு அறிந்திருந்தார்இ ஆனால் அவன் தன்னைப் பின்பற்ற வேண்டும் என்று விரும்பினார்.<br>* நாம் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.<br><br>**முக்கிய வசனம்: லூக்கா 5: 32**<br>**வேத பாகம்: லூக்கா 5: 27 - 32** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | குழந்தைகள் வளர்ந்த பிறகு அவர்கள் எந்தவகையான வேலை செய்ய விரும்புகிறார்கள் என்பதைக் குறித்து அவர்களுடன் கலந்துரையாடுங்கள். இந்த வேலைகளைச் செய்வதில் உள்ள நன்மை என்ன என்பதை மதிப்பீடு செய்யுங்கள்.<br>அல்லது உங்கள் சமூகத்தில் பொதுவான சில எளிய வேலைகளைச் செய்வதுபோல நடித்துக்காட்டுங்கள்இ அவை என்னவென்று குழந்தைகள் யூகிக்கட்டும்.<br>இன்றைய கதை வரி வசூலித்த மத்தேயு (லேவி) என்ற மனிதனைப் பற்றியது என்பதை விளக்குங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * ஒரு நாள் மத்தேயு தன் வேலையைச் செய்துகொண்டிருப்பதை இயேசு கவனித்தார். இயேசு மத்தேயுவைக் குறித்து என்ன நினைத்தார் என்று ஊகிக்கவும் - மத்தேயு எப்படிப்பட்ட மனிதன் என்று அவருக்குத் தெரியுமா? ஆம் நிச்சயமாக ... அவருக்குத் தெரியும். நம் ஒவ்வொருவரையும் பற்றி எல்லாம் அவருக்குத் தெரியும். மத்தேயுவுடன் ஏதாவது செய்ய இயேசு விரும்புகிறாரா? ஆம்! மத்தேயு போன்றோருக்கு சரியாக உதவி செய்யவே இயேசு வந்தார் - அவர் மத்தேயுவின் வாழ்க்கையை மாற்ற முடியும்! ஆகவேஇ அவர் மத்தேயுவின் அருகில் நின்றுஇ "என்னைப் பின்பற்றிவா" என்றார். (லூக்கா 5: 27) மத்தேயு என்ன செய்வான்? மத்தேயு தேர்வு செய்யவேண்டியிருந்ததை முன்வைக்கவும்.<br>* மத்தேயு என்ன செய்ய விரும்புகிறான் என்பதை உடனடியாக அறிந்திருந்தார். அவன் இயேசுவைப் பின்பற்றுவான்! இயேசு அவனை அழைத்தது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது!<br>* அவன் எழுந்துஇ எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவோடு சென்றான். (லூக்கா 5: 28) கர்த்தராகிய இயேசு தம்மைப் பின்தொடரவும்இ அவரை நம் வாழ்க்கையில் கொண்டிருக்கவும் ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுக்கிறார் என்பதை விளக்குங்கள். நாமும் தேர்வு செய்ய வேண்டிய ஒன்று உள்ளது.<br>* பிற்காலத்தில்இ தேவன் ஒரு முக்கியமான வேலையைச் செய்ய மத்தேயுவைத் தேர்ந்தெடுத்தார். அவர் புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்தை எழுதினார். அவர் இயேசுவைப் பின்தொடர அனுமதிக்க முடிவு செய்ததும் இயேசு அவனது வாழ்க்கையில் இருந்த தவறான விஷயங்களை போக்கியதும் என்ன ஒரு அற்புதமான நாள். அப்பொழுது முதல் அவனது வாழ்க்கை மாற்றப்பட்டது.<br>* இயேசுவைச் சந்தித்தது தன்னுடைய வாழ்க்கையை எப்படி மாற்றியது என்பதை தனது நண்பர்களுக்கு மத்தேயு தெரியப்படுத்த விரும்பினான். ஆகவேஇ இயேசுவையும் அவருடைய சீடர்களையும் சேர்த்துஇ தனது வீட்டில் இரவு உணவிற்கு அவர்களை அழைத்தான். மத்தேயுவுடன் இயேசு சேர்ந்திருப்பது தவறு என்று அங்கே இருந்த சிலரும் அவனது நண்பர்களும் நினைத்தார்கள். தாங்கள் வாழ்க்கையில் நல்லவர்கள் என்று நினைப்பவர்களுக்கு அல்லஇ ஆனால் பாவம் செய்ததை அறிந்து தாங்கள் செய்த பாவங்களுக்காக மனம்வருந்துகிறவர்களுக்காகவே வந்தார். (லூக்கா 5: 29 - 32 |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். லூக்கா 5: 32. ஏதேனும் கடினமான சொற்கள் இருப்பின் விளக்குங்கள் - எ.கா. நீதியும் மனந்திரும்புதலும். |
| **நினைவில்வையுங்கள்** | வகுப்பறை அமைப்பில்இ குழந்தைகள் இந்த கதைகளில் இயேசு சந்தித்த மக்கள் அனைவரையும் சேர்த்து வெவ்வேறு படங்களால் ஆன ஒரு படத்தொகுப்பை உருவாக்கலாம். அல்லது பி 8ல் உள்ள அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டும்இ முந்தைய குறிப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விகளையும் மத்தேயு பற்றிய சிலவற்றையும் பயன்படுத்தி மீள்பார்வை வினாடி வினா எடுக்கலாம் எ.கா.<br><br>☐ மத்தேயு என்ன வேலை செய்தான்?<br>☐ இயேசு மத்தேயுவிடம் என்ன சொன்னார்?<br>☐ இயேசுவைப் பின்தொடர்ந்த பிறகு மத்தேயு என்ன செய்தான்? |

B9 கதை 1

மோசேயின் பிறப்பு - இந்தக் கதை தேவன் எவ்வாறு அக்கறை காட்டுகிறார் என்பது பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தேவன் மோசேயை பராமரித்தார்இ அவர் நம்மையும் பராமரிக்கிறார். (நிலை 1)<br>* மோசேயின் வாழ்க்கையைக் குறித்து தேவன் ஒரு திட்டத்தை வைத்திருந்தார்இ அவர் நமக்கும் வைத்திருக்கிறார். (நிலை 2)<br>**முக்கிய வசனம்: எபிரெயர் 11: 23**<br>**வேத பாகம்: யாத்திராகமம் 2: 1 - 10** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார் என்பதை விளக்குங்கள். நாம் பிறந்த குடும்பங்கள் மற்றும் நமக்கு நடக்கும் காரியங்கள் சீரற்றவை அல்ல - மாறாகஇ தம்மைச் சேவிக்க நம்மை தயார்படுத்த தேவன் அவற்றைப் பயன்படுத்துகிறார். இந்தக் கதையில் நாம் மோசேயைப் பற்றி தெரிந்துகொள்ளப்போகிறோம். வளர்ந்தபிறகு மோசே செய்வதற்காக மிக முக்கியமான வேலையை தேவன் வைத்திருந்தார். |
| **கற்றுக்கொடுங்கள்** | * இஸ்ரவேலர் (எபிரேயர்கள்) அடிமைகளாக இருப்பதற்கான பின்னணியை சுருக்கமாக விளக்குங்கள் - நிலை 2 பாடத்தின் அறிமுகத்தைப் பார்க்கவும். (யாத்திராகமம் 1: 1-11) பார்வோன் ராஜா இஸ்ரவேலர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைத் தடுக்க மிகவும் ஆசைப்பட்டான்இ இதனால் இஸ்ரவேலருடைய ஆண் குழந்தைகளையெல்லாம் நைல் நதியில் மூழ்கடித்துக் கொல்ல முடிவு செய்தான். (யாத்திராகமம் 1: 22) ஒரு இஸ்ரேலிய அம்மாவும் அப்பாவும் ஒரு புதிய ஆண் குழந்தையைப் பெற்றிருந்தால் எப்படி உணர்ந்திருப்பார்கள்?<br>* ஒரு வீட்டில்இ ஒரு அழகான ஆரோக்கியமான ஆண் குழந்தை பிறந்தது. அதை தேவன் பாதுகாப்பார் என நம்பி அதன் பெற்றோர் வீட்டில் மறைத்து வைத்தனர். ஆனால் மூன்று மாதங்களுக்குப் பிறகுஇ அவர்களால் இனி அவனை மறைக்க முடியவில்லை. ஏன் முடியாது? அவனது தாயார் நாணலால் (விளக்கவும்) ஒரு தண்ணீர்ப் புகாத கூடையை உருவாக்கிஇ குழந்தையை உள்ளே வைத்துஇ கூடையை ஆற்றின் ஓரத்திலுள்ள உயரமான நாணல்களில் மறைத்து வைத்தாள். என்ன நடக்கும் என்பதைப் பார்க்க குழந்தையின் சகோதரி மிரியாம் இருந்தாள்இ ஆனால் தேவனால் மட்டுமே குழந்தையை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும். (யாத்திராகமம் 2: 1 - 4)<br>* கதையின் அடுத்த பகுதியை வியப்புடன் நாடக முறையில் சொல்லுங்கள் - இளவரசியும் (பார்வோனின் மகள்) அவளது உதவியாளர்களும் வருவதை மிரியாம் எவ்வாறு கவனிக்கிறாள் என்பதை விவரிக்கவும். இளவரசி குழந்தையை கவனிப்பாளா? அவள் ராஜாவிடம் சொல்வாளா? ஆமாம்இ இளவரசி கூடையைக் கண்டுபிடித்துஇ தன்னிடம் கொண்டு வரும்படி அவளுடைய உதவியாளரிடம் கேட்டாள். எபிரேய குழந்தையை உள்ளே பார்த்தபோது அவள் அளித்த பதிலை விவரிக்கவும். இளவரசி அவனுக்கு தீங்கு விளைவிக்க விடமாட்டாள்! குழந்தையை பாதுகாப்பாக வைப்பதில் தேவன் வேலை செய்தார்! (யாத்திராகமம் 2: 5 - 6)<br>* நடந்த எல்லாவற்றிற்கும் பின்னால் தேவன் இருக்கிறார் என்பதை குழந்தைகள் புரிந்துகொள்ள உதவுங்கள். பார்வோனின் சட்டப்படிஇ குழந்தை நீரில் மூழ்கடிக்கப்பட்டிருக்க வேண்டும். மோசேயின் பெற்றோர் தேவன்மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள் அவர்கள் தங்கள் குழந்தையைப் பார்த்துக்கொள்வார்கள் என்று தேவனை நம்பினார்கள்இ அவர் அப்படியே செய்தார். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். எபிரெயர் 11:23. (நிலை 2). நிலை 1 குழந்தைகள் முதல் வாக்கியத்தைக் கற்றுக்கொள்ளலாம். |
| **நினைவில்வையுங்கள்** | ☐ மோசேயின் கதை எந்தப் புத்தகத்தில் காணப்படுகிறது?<br>☐ எல்லா எபிரேய குழந்தைகளுக்கும் என்ன செய்ய பார்வோன் முடிவு செய்தான்?<br>☐ வீட்டில் எவ்வளவு காலம் குழந்தை மறைத்துவைக்கப்பட்டது?<br>☐ அம்மா என்ன செய்தாள்?<br>☐ குழந்தையை எங்கே வைத்தாள்?<br>☐ நதியைப் பார்ப்பதற்காக வந்தது யார்?<br>☐ குழந்தையை கண்டுபிடித்தது யார்?<br>☐ அப்பொழுது முதல் மோசேயின் வாழ்க்கை ஆபத்தில் இல்லைஇ ஏன்?<br>☐ கதையில் விசுவாசத்தைக் காட்டியது யார்?<br>☐ மோசேயைப் பாதுகாத்தது யார்? |

B 9 கதை 2

மோசேயின் பெரிய தவறு - சிறந்தது என்று நாம் நினைப்பதைச் செய்வதைப் பற்றியது இந்தக் கதை

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* கோபத்தில் மிக விரைவாக செயல்பட்டபோது மோசே ஒரு தவறு செய்தான்.<br>* தவறான செயல்களைச் செய்வதால் ஏற்படும் விளைவுகளிலிருந்து நாம் தப்ப முடியாது.<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 2: 11 - 15**<br>**வேத பாகம்: எண்ணாகமம் 32: 23** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | சில நேரங்களில் நமக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறோம். ஒரு குழந்தைக்கு பெரியவர்கள் எப்படி செய்ய வேண்டும் என்று காட்டக்கூடிய ஒரு உதாரணத்தைத் தேர்வுசெய்கஇ ஆனால் குழந்தை அதை தனது சொந்த வழியில் செய்கிறதுஇ அது சரியாக செயல்படாது! கடந்த வாரம் மோசேயைப் பற்றி அறிந்தோம். மீள்பார்வை செய்ய சில கேள்விகளைக் கேளுங்கள். மோசே சிறுவனாக இருந்தபோது எங்கு வாழ்ந்தான்? அவனது சொந்த மக்கள் எந்தப் பெயரால் அழைக்கப்பட்டனர்? (இஸ்ரவேலா் ∴ எபிரேயர்கள்). அவர்கள் அடிமைகளாக இருந்ததையும்இ எகிப்தியர்களால் அவர்கள் எவ்வாறு கொடூரமாக நடத்தப்பட்டார்கள் என்பதையும் குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * ஒரு நாள் மோசே தன் சொந்த மக்களைப் பார்க்கச் சென்றான். திடீரென்று அவர்களில் ஒருவனை ஒரு எகிப்தியன் தாக்குவதை கவனித்தான். மோசே எப்படி உணர்ந்திருப்பான்? (கோபம்இ தனது சொந்த மக்களைப் பாதுகாக்க விரும்புவது). யாராவது கவனிக்கிறார்களா என்றறிய மோசே சுற்றிப் பார்த்தான்இ பிறகு அந்த எகிப்தியனை கொன்றான். பின்னா் உடலை மணலில் மறைத்து வைத்தான். அவன் சரியானதைச் செய்ததாக மோசே நினைத்தான் இஆனால் அவன் செய்தது சரியா? மோசேயின் செயல் மிகவும் தவறானது என்பதை அறிய குழந்தைகளுக்கு உதவுங்கள். (நிலை 2: அந்த எகிப்தியனின் தவறான செயலை தேவன் எப்படிப் பார்த்தார் என்பதையும்இ எதிர்காலத்தில் தேவன் எல்லா தவறுகளையும் எவ்வாறு கையாள்வார் என்பதையும் குறிப்பிடலாம்.) மோசே தான் செய்த காரியத்திலிருந்து தப்பிப்பான் என்று நினைக்கிறீர்களா? இல்லையென்றால் ஏன்? (யாத்திரா 2:1112)<br>* மறுநாள் மோசே இரண்டு எபிரேயர்கள் சண்டையிடுவதைக் கண்டான். என்ன நடக்கிறது என்று அவன் கேட்டபோதுஇ அவர்களில் ஒருவன்இ “எங்களை நியாயந்தீர்க்க நீ யார் என்று நினைக்கிறாய்? நீ அந்த எகிப்தியனைக் கொன்றதுபோல என்னைக் கொல்ல நினைக்கிறாயா?” என்றான். எகிப்தியனைக் கொன்றது வெளியில் தெரிந்துவிட்டது என்று மோசே இப்போது அறிந்துகொண்டான். இப்போது அவன் எப்படி உணர்ந்திருப்பான்? (ராஜா கேட்பார் என்று பயப்படுகிறான்) விரைவில் பார்வோன் மோசே செய்ததைக் கேட்டு அவனைக் கொல்ல விரும்பினான். மோசே தனது உயிருக்கு பயந்து மீதியான் என்ற வேறொரு நாட்டிற்கு ஓட வேண்டியிருந்ததுஇ அங்கு அவன் எத்திரோ என்ற மனிதனுக்கு மேய்ப்பனாக பணிபுரிந்தான். (யாத்திராகமம் 2: 13 - 15)<br>* மோசே செய்த தவறான காரியத்தைப் பற்றியும் தேவன் அறிந்திருந்தார். நாம் செய்யும் எல்லாவற்றையும் தேவன் எப்படிப் பார்க்கிறார் என்பதைப் பற்றி பேசுங்கள்இ நம்முடைய தவறான செயல்களை அவரிடமிருந்து மறைக்க முடியாது. மோசே வளா்ந்தவனாக இருந்தாலும்இ அவன் தவறு செய்தான்இ சரியானதைச் செய்யவில்லை. அவன் ஒரு தலைவனாக இருக்கத் தயாராவதற்கு முன்பு இன்னும் நிறைய கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. மோசேயின் தவறிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்இ மேலும் தேவனுக்குப் பிரியமான சரியான வழியில் செயல்பட நமக்கு உதவ அவரை சார்ந்துகொள்ள வேண்டும். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். எண்ணாகமம் 32: 23. வசனத்தைச் சுட்டிக்காட்டி மோசேயின் தவறை விளக்குங்கள். மோசேயின் பாவம் என்ன? அவன் எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டான்? குழந்தைகளின் அனுபவத்திற்கு பொருத்தமான ஒரு சூழ்நிலைக்கு நீங்கள் ஒரு குறிப்பிட்ட உதாரணத்தையும் கொடுக்கலாம். |
| **நினைவில்வையுங்கள்** | வினாடி வினாவுக்கு இந்த சரியா ∴ தவறா வாக்கியங்களைப் பயன்படுத்தவும்:<br>☐ மோசே ஒரு இஸ்ரவேலனைக் கொன்றான்.<br>☐ யாரும் அவனைப் பார்க்கவில்லை என்று அவன் நினைத்தான்.<br>☐ இன்னொரு எபிரேய மனிதன் அவனைப் பார்த்தான்.<br>☐ நடந்ததை தேவன் பார்த்தார்.<br>☐ பார்வோன் மோசேயை சிறையில் அடைத்தான்.<br>☐ மோசே ஒரு தலைவனாக இருப்பதற்கு முன் கற்றுக்கொள்ள நிறைய விஷயங்கள் இருந்தன. |

# எரியும் முட்புதரை மோசே காண்கிறான்: தேவனுக்காக வேலை செய்ய ஆயத்தமாக இருப்பதைப் பற்றின கதை

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தேவன் பரிசுத்தர் என்பதை நாம் எப்போதும் நினைவில் வைக்க வேண்டும்.<br>* மோசே ஒரு தயக்கமுள்ள தலைவன்இ ஆனால் தேவன் அவனுக்கு உதவிசெய்வதாக உறு-தியளித்தார்.<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 3: 12**<br>**வேத பாகம்: யாத்திராகமம் 3 - 4: 17** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | முக்கியமான மற்றும் உற்சாகமான ஒன்றைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுவதைப் பற்றி பேசுங்கள்இ எ.கா. உங்கள் குழுவில் உள்ள குழந்தைகளுக்கு பொருத்தமான பொறுப்பு. அதைச் செய்யும்படி கேட்கப்பட்டபோது நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள்? (பதட்டமாக ∴ வேறொருவர் கேட்கப்பட்டாரா?) இன்றைய கதை மோசே செய்த பெரிய தவறுக்கு 40 ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கிறது. மோசே பாலைவனத்தில் 40 ஆண்டுகள் மேய்ப்பனாக இருந்தான். தேவன் அவனை மறக்கவில்லை. அவர் அவனை மன்னிக்க தயாராக இருந்தார்இ இப்போது அவனுக்கு ஒரு சிறப்பான வேலை உள்ளது. |
| **கற்றுக்கொடுங்கள்** | * ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரியாக இருந்ததுஇ ஆனால் ஒரு நாள்... எரியும் ஒரு புதரை மோசே கவனித்தான். விசித்திரமான விஷயம் என்னவென்றால்இ தீப்பிழம்புகள் இருந்தபோதிலும்இ இலைகள் மற்றும் கிளைகள் எரியவில்லை! மோசே அதைப் பார்க்க அருகில் சென்றான்இ அப்பொழுது தேவன் மோசேயை பெயர் சொல்லி அழைத்தார். அடுத்த பகுதியைச் சொல்ல பைபிளிலிருக்கும் வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். தேவன் அங்கிருந்ததால் அது சிறப்பான இடம் - “பரிசுத்த ஸ்தலம்” என்பது மிகவும் முக்கியமானது என்று விளக்குங்கள். தேவன் பரிசுத்தமானவர்இ நம்மிலிருந்து மாறுபட்டவர் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். தேவன் நம்மைப் போலல்லஇ அவரிடத்தில் எந்த பாவமும் இல்லை. மோசே தேவனின் மகத்துவத்தைப் புரிந்துகொண்டான் எனவே தனது செருப்பை கழற்றிவிட்டு முகத்தை மறைத்துக்கொண்டான். (யாத்திராகமம் 3: 1 - 6)<br>* தேவனுடைய பரிசுத்தத்திற்கு நாம் மரியாதை கொடுக்க வேண்டும். எகிப்தில் இஸ்ரவேலரின் வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை நினைவுகூர குழந்தைகளுக்கு உதவுங்கள். தேவன் மோசேயிடம் அங்கு நடக்கிற எல்லா மோசமான விஷயங்களையும் அறிந்திருப்பதாக கூறினார்இ மேலும் இப்போது அவர் அவர்களை எகிப்திலிருந்து ஒரு புதிய நாட்டிற்கு கொண்டுப்போவதாக குறிப்பிட்டார். மோசே அவர்களுக்குத் தலைவனாக இருக்க வேண்டும் என்றும் அவன் பார்வோன் ராஜாவிடம் சென்று பேச வேண்டும் என்றும் தேவன் விரும்பினார். பார்வோனிடம் திரும்பிச் செல்வதைப் பற்றி மோசே எப்படி உணர்ந்திருக்கலாம் என்பதை ஆராயுங்கள். (யாத்திராகமம் 3: 7 - 10)<br>* அறிமுகத்தில் குழந்தைகளின் தனிப்பட்ட பதில்களுக்கும்இ ஒரு தலைவனாக இருப்பதைப் பற்றி மோசே எப்படி உணர்ந்தான் என்பதில் அவர்கள் செய்த சரியான கணிப்புகளுக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தவும். நிலை 2 பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள உரையாடல்களின்படி மோசேயின் ஆட்சேபனைகளையும் தேவனுடைய எதிர் ஆட்சேபனைகளையும் பைபிள் வசனத்தைக்கொண்டு தொட-ர்புபடுத்துங்கள். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யாத்திராகமம் 3: 12ய. ஒரு நீண்ட கதைக்குப் பிறகு வரும் ஒரு சிறிய வசனம் இது. குழந்தைகள் அதை ஒரு தனிப்பட்ட புக்மார்க்காக வைக்க விரும்பலாம்இ அல்லது ஒரு குழுவாக இருந்து அதில் ஒவ்வொரு குழந்தையும் ஒரு கடிதத்தில் ஒரு காகித்தை அலங்கரிப்பது அல்லது ஒட்டுவதன்மூலம் படத்தொகுப்பை உருவாக்க விரும்பலாம். |
| **நினைவில்வையுங்கள்** | ☐ மோசே கண்ட முட்புதரின் விசித்திரம் என்ன?<br>☐ மோசே பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தபோது என்ன செய்தான்?<br>☐ பரிசுத்தம் என்பதின் அர்த்தம் என்ன?<br>☐ மோசே என்ன வேலை செய்ய வேண்டுமென்று தேவன் விரும்பினார்?<br>☐ மோசே தன்னைக் குறித்து கூறும் ஒரு சாக்குபோக்கை குறிப்பிடுங்கள்.<br>☐ தேவன் சொன்னதை தவிர்க்க மோசே என்ன செய்தான்?<br>☐ மோசே தன்னுடன் அழைத்துச் செல்ல தேவன் யாரை அனுமதித்தார்?<br>☐ தேவன் மோசேயை விட்டுவிடவில்லை. ஏன்? |

## மோசே தேவனுடைய செய்தியைக் கொண்டுவருகிறான்: மோசே எகிப்துக்குத் திரும்புவதைப் பற்றிய கதை

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தேவன் செய்யச் சொன்னக் காரியத்திற்கு மோசே கடைசியில் கீழ்ப்படிந்தான்.<br>* மோசேயின் வாழ்க்கையைக் குறித்து தாம் வைத்திருந்த திட்டத்தை அவனுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் மூலம் தேவன் நிறைவேற்றினார்.<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 4: 15**<br>**வேத பாகம்: யாத்திராகமம் 4 - 1: 31** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | நமது வாழ்க்கையில் முக்கியமான மாற்றங்களைப் பற்றி பேசுங்கள் - எ.கா. வீடு மாறிப்போதல்இ உயர்நிலைப் பள்ளிக்குச் செல்வதுஇ திருமணம் செய்வது போன்றவை. மோசே தனது வாழ்க்கையில் நிறைய மாற்றங்களைக் கொண்டிருந்தான் - குழந்தையாக இருந்த முதல் மாதங்களை நினைவுகூருங்கள்இ பின்னர் பார்வோனின் அரண்மனையில் அவன் 40 வயதுவரை இருந்தான்இ அதைத் தொடர்ந்து 40 வருடங்கள் பாலைவனத்தில் வாழ்ந்தான். (ஒரு வகுப்பறை சூழ்நிலையில் இந்த நிகழ்வுகளின் படங்களை மோசேயின் வாழ்க்கையின் காலவரிசையில் வைப்பது பயனுள்ளதாக இருக்கும்.) இப்போது மோசே தனது வாழ்க்கையில் மிகப்பெரிய சவாலை எதிர்கொண்டிருந்தான். தேவன் என்ன செய்யச் சொன்னார்? |
| **கற்றுக்கொடுங்கள்** | மோசேக்கு மீதியான் தேசத்தில் ஒரு மனைவியும் இரண்டு மகன்களும் இருந்தார்கள். அவன் தனது மாமனார் எத்திரோவிடம் மீண்டும் எகிப்துக்குச் செல்லவா எனக் கேட்டான்இ எத்திரோவும் போக சம்மதித்தார்இ மோசே தனது மனைவி மற்றும் மகன்களுடன் கழுதைமீது சவாரிசெய்து புறப்பட்டான். தன்னுடன் தேவன் பயன்படுத்தச் சொன்ன சிறப்பு கோலையும் மோசே கொண்டு போனான். எகிப்தில் கடைசியாக இருந்தபோது அவனைக் கொல்ல விரும்பிய மனிதர்கள் இப்போது உயிருடன் இல்லை என்று தேவன் மோசேயிடம் சொன்னார். பயப்பட வேண்டாம் என்று தேவன் மோசேக்கு உதவி செய்தார். ஏற்கனவே தேவன் மோசேக்கு அளித்த வாக்குறுதியைக் காத்துக்கொண்டிருந்தார். கடந்த வாரத்தின் முக்கிய வசனத்தை நினைவுகூர முடியுமா? (யாத்திராகமம் 4: 18 - 20) பின்னர் தேவன் மோசேக்கு அளித்த மற்றொரு வாக்குறுதியைக் காப்பாற்றினார். மோசே பயணத்தில் இருந்தபோதுஇ அவனுடைய சகோதரன் ஆரோன் வந்து அவனைச் சந்தித்தான். ஆரோன் மோசேயுடன் ஏன் இருக்கப்போகிறான்? எல்லாவற்றையும் மோசே ஆரோனிடம் சொன்னான்இ தன்னிடமுள்ள தடியால் தேவன் செய்யச் சொன்ன அதிசயங்களைப் பற்றியும் சொன்னான். தேவன் தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற அவரை எப்போதும் நம்பலாம். நாம் அவருக்கு சொந்தமானவர்கள் என்றால் அவர் நமக்கும் அவ்வாறே செய்வார். (யாத்திராகமம் 4:27இ 28)<br>* எகிப்திலிருந்து திரும்பி வரும்போது தேவன் தனக்கான வழியைத் ஆயத்தமாக்குவதைக் கண்டு மோசே உற்சாகமாக இருந்திருக்க வேண்டும். தேவனின் திட்டத்தை முன்னடத்திச் சென்றதில் இந்த கதையில் உள்ளவர்களை மதிப்பீடு செய்யவும் - எத்திரோஇ ஆரோன்இ தலைவர்கள் மற்றும் மக்கள். மோசேயும் ஆரோனும் இன்னும் இந்தத் திட்டத்தை யார் முன் வைக்க வேண்டும்? இது செய்ய எளிதான விஷயமல்ல என்றாலும்இ அவர்கள் இன்னும் தேவனை நம்பலாம் என்பதை வலியுறுத்துங்கள். தேவன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தினார்! |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யாத்திராகமம் 4: 15. மோசேயும் ஆரோனும் ஒன்றிணைந்து செயல்படுவதும்இ தேவன் அவர்களுடன் இருப்பதும் சம்பந்தப்பட்ட இந்த வசனத்தின் சூழலை குழந்தைகள் புரிந்துகொள்வதை உறுதிசெய்யுங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | இதுவரையுள்ள மோசேயின் வாழ்க்கையை முந்தைய கதைகள் மற்றும் கதை 4ன் இந்தக் கேள்விகளைப் பயன்படுத்துவதன் மூலம் மீள்பார்வை செய்யுங்கள்:<br>☐ மோசேயுடன் எகிப்துக்குத் திரும்பியது யார்?<br>☐ வழியில் அவனை சந்தித்தது யார்?<br>☐ மோசே தேவனால் அனுப்பப்பட்டான் என்று மக்கள் தெரிந்துகொண்டது எப்படி?<br>☐ மோசே மக்களுக்கு முன் செய்த அற்புதங்களில் ஒன்றை விளக்குங்கள். |

B 10 கதை 1

மோசேயும் முதல் வாதையும் - இந்தக் கதை தேவனுக்குக் கீழ்ப்படிவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தேவனுடைய கட்டளைகளுக்குச் செவிசாய்த்துக் கீழ்ப்படிய வேண்டும்.<br>* தேவனுக்குச் செவிசாய்க்க மறுப்பதும் கீழ்ப்படியாமல் இருப்பதும் எப்போதும் தண்டனையில் சென்று முடியும்.<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 7: 16**<br>**வேத பாகம்: யாத்திராகமம் 7: 1-24** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பள்ளி சூழ்நிலையிலோ அல்லது பரந்த சமுதாயத்திலோ கடைபிடிக்க வேண்டிய விதிகள் மற்றும் கீழ்ப்படியாமையின் விளைவுகள் பற்றி குழந்தைகளுடன் பேசுங்கள். இன்றைய பாடத்துடன் இணைக்க சில கேள்விகளுடன் டீ9 கதை 4 ஐ மீள்பார்வை செய்வது பயனுள்ளதாக இருக்கும். |
| **கற்றுக்கொடுங்கள்** | * இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியேற அனுமதிக்கும்படி மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் கேட்க வேண்டிய நேரம் வந்துவிட்டதுஇ அதனால் அவர்கள் பாலைவனத்தில் தேவனை ஆராதிக்கமுடியும். பார்வோனின் பதிலை கணிக்க குழந்தைகளிடம் கேளுங்கள். அவனது மறுப்பு மற்றும் அதன் விளைவுகள் காரியங்களை முன்னெப்போதையும் விட மோசமாக்கியதை விளக்குங்கள். பார்வோன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதை அறிய குழந்தைகளுக்கு உதவுங்கள். நீங்கள் இஸ்ரவேலராக இருந்திருந்தால் மோசேயைப் பற்றி என்ன நினைத்திருப்பீர்கள்? (யாத்திராகமம் 5: 1 - 21)<br>* இவ்வாறு நடக்க தேவன் ஏன் அனுமதித்தார் என்பதை மோசேயால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் அதைப் பற்றி தேவனிடம் கேட்டான். தம்முடைய வல்லமையைக் காண்பிப்பேன் என்று தேவன் அவர்களுக்கு வாக்குறுதியளித்தார்இ ஆரம்பத்தில் பார்வோன் கீழ்ப்படியமாட்டான் என்றாலும்இ இறுதியில் தேவன் சொல்லுகிறபடி அவன் செய்வான். நாம் வாக்குறுதிகளை கொடுக்கிறோம்இ அவைகளை மறந்துவிடுகிறோம்இ அல்லது நிறைவேற்ற முடிவதில்லைஇ ஆனால் தேவனுடைய வாக்குறுதிகள் எப்போதும் நிறைவேறும் என்பதை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள்.<br>* மீண்டும் பார்வோனிடம் சென்று இஸ்ரவேல் அடிமைகளை விடுவிக்கும்படி தேவன் கேட்கச் சொன்னார்! (யாத்திராகமம் 5: 22 - 7: 5)<br>* இந்த நேரத்தில்இ பார்வோன் ஒரு அதிசயத்தைக் கேட்டான்இ ஆரோனின் கோல் ஒரு பாம்பாக மாறியது. பார்வோனின் மந்திரவாதிகள் அவ்வாறே செய்தார்கள் இஆனால் ஆரோனின் பாம்பு அனைத்து மந்திரவாதிகளின் பாம்புகளையும் சாப்பிட்டது. இது தேவனைப் பற்றி என்ன வெளிப்படுத்தியது? இன்னும் பார்வோன் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. (யாத்திராகமம் 7: 6-12)<br>* பின்னர் தேவன் மோசேயையும் ஆரோனையும் நைல் நதி அருகே பார்வோனைச் சந்திக்கச் சொன்னார். தேவனுடய கட்டளை மீண்டும் வழங்கப்பட்டது. பார்வோன் கீழ்ப்படியவில்லை என்றால்இ நைல் நதி இரத்தமாக மாறும்இ மேலும் சுத்தமான தண்ணீர் இருக்காதுஇ மீன்கள் அனைத்தும் இறந்து விடும். பார்வோன் கேட்க மறுத்துவிட்டான். அவன் திரும்பி தனது வீட்டிற்கு சென்றான் என்று பைபிள் சொல்கிறது. பார்வோனின் அணுகுமுறையைப் பற்றி விவாதிக்கவும் - எந்த வார்த்தைகள் அதை விவரிக்கின்றன? கடினமான இருதயம் கொண்டவன் என்று பைபிள் விவரிக்கிறது என்பதை விளக்குங்கள். (யாத்திராகமம் 7: 14-19)<br>ஆகவேஇ எகிப்தியர்கள் அனைவரும் ஆற்றின் நீரைக் குடிக்க முடியாத காரணத்தினால் ஆற்றைச் சுற்றிலும் தோண்டினர். இது முதல் வாதையாகும்இ இது 7 நாட்கள் நீடித்தது. (யாத்திராகமம் 7: 24-25) மோசேயும் ஆரோனும் தேவன் செய்யச் சொன்னதைச் சரியாகச் செய்தார்கள்இ ஒவ்வொரு விவரத்திற்கும் கீழ்ப்படிந்தார்கள். இப்படிச் செய்யத்தான் நாம் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய கீழ்ப்படிதலில் தேவன் மகிழ்ச்சி அடைகிறார் என்று பைபிள் சொல்கிறது! |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யாத்திராகமம் 7: 16 |
| **நினைவில்வையுங்கள்** | ☐ தேவன் மோசேக்கும் ஆரோனுக்கும் அளித்த வாக்குறுதி என்ன?<br>☐ ஆரோன் செய்த முதல் அற்புதம் எது?<br>☐ முதல் வாதையில் நைல் நதிக்கு என்ன நேர்ந்தது? |

B 10 கதை 2

மோசேயும் கடைசி வாதையும் - எபிரேயர்களைக் காப்பாற்றுவதற்கான தேவனுடையத் திட்டத்தைப் பற்றியது.

**நாம் அறிந்துகொள்வது:**

* பார்வோனும் எகிப்தியர்களும் தேவனுக்குக் கீழ்ப்படிய மறுத்தால் தண்டிக்க வேண்டியிருக்கும்.
* தேவன் பாவத்தை விட்டுவைக்க முடியாதுஇ ஆனால் அவர் இரட்சிப்பின் வழியை வழங்குகிறார்.

**முக்கிய வசனங்கள்: யாத்திராகமம் 12: 13**
**வேத பாகம்: யாத்திராகமம் 11: 1-10இ 12: 1-13**

## அறிமுகப்படுத்துங்கள்

சில சூழ்நிலைகளில் நாம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறோம் என்பதைப் பற்றி விவாதிக்கவும். எடுத்துக்காட்டுகளைத் தேர்வுசெய்யுங்கள் குழந்தைகள் தொடர்புபடுத்தட்டும். எ.கா. சன் கிரீம் பயன்படுத்துவது வெண்ணிற தோல் உடையவர்களை சூரியனின் ஆபத்திலிருந்து பாதுகாக்கிறது. பாஸ்போர்ட்டை எடுத்துச் செல்வது ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு கைதுசெய்யப்படுவோம் என்று பயப்படாமல் செல்ல அனுமதிக்கிறது. ஒரு தடுப்பூசி ஒரு நோய்த்தொற்று வராமல் தடுக்கிறது. இன்றைய கதையில்இ இஸ்ரவேலர்கள் அவருடைய தண்டனையிலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய தேவன் அவர்களுக்கு ஒரு சிறப்பு அடையாளத்தை எப்படிக் கொடுத்தார் என்பதைக் கற்றுக்கொள்வோம்.

## கற்றுக்கொடுங்கள்

* இதுவரை ஒன்பது வாதைகள் இருந்தனஇஆனால் ஒவ்வொரு முறையும் பார்வோன் அவர்களை விட மறுத்துவிட்டான். தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை பார்வோன் உணரும்வரை தேவன் பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டிருந்தார்.
* இப்போது பார்வோன் மோசேயை இனி ஒருபோதும் பார்க்க விரும்பவில்லை என்று கூறியிருந்தான். (யாத்திராகமம் 10: 27-29) ஆனால் இறுதி வாதை என்னவாக இருக்கும் என்பதை தேவன் மோசேக்கு விளக்கினார். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு பயங்கரமான தண்டனை இருக்கப்போகிறதுஇ ஒவ்வொரு குடும்பத்திலும் முதற்பேறான மகன் இறக்கப்போகிறான். (யாத்திராகமம் 11: 4-6) ஆனால் இஅந்தக் கொடூரமான தண்டனையை தேவனால் அனுப்ப முடியும் அல்லது அவர் அனுப்புவார் என்று பார்வோன் நம்பவில்லை. (யாத்திராகமம் 11: 10)
* பைபிளில் தேவன் பேசுவது அல்லது சொல்வது எதுவுமே உண்மை என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்இ தாம் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் அவர் நிறைவேற்றுவார்.
* பின்னர் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளியேற தயாராக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய கர்த்தர் மோசேக்கு விளக்குகிறார். ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஆட்டுக்குட்டியைக் கொல்ல வேண்டியிருந்தது. அந்த வீடு இஸ்ரவேலருக்கு சொந்தமானது என்பதைக் காட்ட தங்கள் வீட்டுவாசல் நிலைக்கால்களிலும் மேற்சட்டத்திலும் சிறிது ரத்தம் பூசியிருக்க வேண்டும். பின்னர் அவர்கள் சமைத்த ஆட்டுக்குட்டிஇ அப்பம் மற்றும் கசப்பான கீரை முதலியவை அடங்கிய ஒரு சிறப்பு உணவை சாப்பிட வேண்டும். மிக விரைவில் வெளியேற தயாராக உடையணிந்துஇ உணவை விரைவாக சாப்பிட வேண்டும். எகிப்திய வீடுகளில் முதற்பேறான மகன்கள் கொல்லப்பட்டபோதுஇ இஸ்ரவேலருடைய கதவுகளில் இரத்தம் இருந்தால் அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று கர்த்தர் விளக்கினார். (யாத்திராகமம் 12: 12-13)
  இஸ்ரவேலர் இறுதியாக உற்சாகத்தோடும் எதிர்பார்ப்போடும் வெளியேறவிருந்தார்கள்இ அவர்கள் எவ்வாறு அறிவுறுத்தல்களைப் பின்பற்றினார்கள் என்பதையும் விவரிக்கவும். இஸ்ரவேலருக்கு இரத்தத்தின் மதிப்புஇ முக்கியத்துவம் மற்றும் அது அவர்களின் ஒரே பாதுகாப்பாய் எப்படி இருந்தது என்பதைப் பற்றி விவாதிக்கவும்.

## கற்றுக்கொள்ளுங்கள்

முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யாத்திராகமம்12: 13.

## நினைவில்வையுங்கள்

கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.

- ☐ தேவனுடைய தண்டனைக்குப் பயன்படுத்தக்கூடிய மற்றொரு சொல் என்ன?
- ☐ பார்வோனுக்கு இறுதி தண்டனை என்னவாக இருக்கும்?
- ☐ இஸ்ரவேலர் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்த அவர்கள் என்ன செய்ய வேண்டும்?
- ☐ கர்த்தராகிய இயேசு நம்மை இரட்சிப்பதை எவ்வாறு சாத்தியமாக்கியுள்ளார்? (ரோமர் 5: 8)
- ☐ அவர்கள் என்ன சாப்பிட வேண்டியிருந்ததுஇ அவர்கள் அதை எப்படி சாப்பிட வேண்டியிருந்தது?

B 10 கதை 3

மோசேயும் எகிப்திலிருந்து தப்பித்தலும் - இந்தக் கதை தேவனுடைய அற்புத வல்லமையைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* எரியும் புதரில் மோசேயுடன் பேசியபோது தாம் வாக்குறுதியளித்தபடியே தேவன் இஸ்ரவேலரை மீட்டார்.<br>* இந்த நிகழ்வை தேவனுடைய வல்லமையின் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்றாக பைபிள் குறிப்பிடுகிறது.<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 14: 30**<br>**வேத பாகம்: யாத்திராகமம் 12: 31-39இ 14: 1-31** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | நாம் செய்ய முடியாத சில விஷயங்களைப் பற்றி சிந்தியுங்கள். விமானம் இல்லாமல் பறக்கவும்இ படகு இல்லாமல் கடலைக் கடக்கவும்இ திசைகாட்டி இல்லாத பாலைவனத்தின் வழியாக வழியைக் கண்டறியவும் மனிதர்களால் முடியாதுஇ ஆனால் தேவனால் சாத்தியமாகும். அவர் இந்தக் கதையில் பைபிளில் பதிவு செய்யப்பட்டுள்ள அவருடைய வல்லமையின் மிகப் பெரிய வெளிப்படுத்தல்களில் ஒன்றைக் காட்டப்போகிறார். |
| **கற்றுக்கொடுங்கள்** | * இரவில்இ எகிப்தின் முதற்பேறான ஆண் பிள்ளைகள் அனைவரும் இறந்தபோதுஇ பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைத்தான். முந்தைய எல்லா வாதைகளுக்கும் பின்னர் பார்வோன் எவ்வாறு நடந்து கொண்டான்? இந்த முறை எவ்வாறு வித்தியாசமானது என்பதை விவரிக்கவும் - எல்லா மக்களும் தங்கள் மந்தைகளையும் கூட்டிக்கொண்டு எகிப்திலிருந்து உடனே வெளியேறும்படி அவன் உத்தரவிட்டான். (யாத்திராகமம் 12: 31-32) இஸ்ரவேலர் தங்கியிருந்தால் எகிப்தியர்கள் அனைவரும் இறந்துவிடுவார்கள் என்று அஞ்சியதால் அவர்களும் இஸ்ரவேலர்களை புறப்பட்டுப்போக ஊக்குவித்தனர். எகிப்தியர்களை விட்டு வெளியேறும்போது வெள்ளிஇ தங்கம் மற்றும் ஆடைகளை பரிசாக வழங்கும்படி கர்த்தர் அவர்களை ஏவினார். (யாத்திராகமம் 12: 35-36) மொத்தத்தில்இ ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் இருந்தனர். வளர்ந்த குழந்தைகள் இந்த எண்ணை எங்காவது தெரிந்த மக்கள்தொகையுடன் ஒப்பிட முயற்சி செய்யலாம்.<br>* கடைசியில் பார்வோன் தேவனுக்குக் கீழ்ப்படிகின்றான்! முதலில் அவன் அவ்வாறு செய்திருந்தால் அவன் இவ்வளவு துன்பங்களைத் தவிர்த்திருக்க முடியும். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகி-யோருக்கு - அதிலும் மிக முக்கியமாகஇ தேவனுக்குக் கீழ்ப்படிவதின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்துங்கள்!<br>* மோசே தலைமையிலான இஸ்ரவேலர் செங்கடலை நோக்கிச் சென்றனர். அவர்களின் உணர்வுகளை சிந்தித்துப்பாருங்கள். ஆனால் அவர்கள் பார்வோனைப் பார்ப்பது இது கடைசியல்ல! தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை அவன் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியிருந்ததால்இ கர்த்தர் பார்வோனின் இருதயத்தை மீண்டும் கடினப்படுத்தினார்! பார்வோன் திடீரென்று தன் கட்டிடத் தொழிலாளர்கள் அனைவரையும் இழந்துவிட்டதை உணர்ந்தான்இ 600 ரதங்களுடன் அவர்களைத் துரத்த முடிவு செய்தான். (யாத்திராகமம் 14:3-7)<br>* இஸ்ரவேலர் மாட்டிக்கொண்டார்கள்! பார்வோன் அவர்களுக்குப் பின்னால் இருந்தான்இ அவர்களுக்கு முன்னால் செங்கடல் இருந்தது. இப்போது அவர்கள் எப்படி உணர்ந்தார்கள் என்று நினைக்கிறீர்கள்? அவர்களின் பீதியையும் அவர்கள் மோசேயை எப்படிக் குற்றம் சாட்டினார்கள் என்பதையும் விவரிக்கவும். ஆனால் மோசே அவர்களை உறுதியாக இருக்கச் சொன்னான்இ கர்த்தர் அவர்களை விடுவிப்பதை காண்பார்கள் என்றான்! (யாத்திராகமம் 14: 10-14) |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யாத்திராகமம் 14: 30 |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>☐ இஸ்ரவேலரை விடுவிக்க பார்வோன் ஏன் முடிவு செய்தான்?<br>☐ எகிப்தியர்கள் அவர்களுக்கு என்ன கொடுத்தார்கள்?<br>☐ பார்வோன் அவர்களைத் துரத்த ஏன் முடிவு செய்தான்?<br>☐ இஸ்ரவேலர் ஏன் பீதியடைந்தார்கள்?<br>☐ அவர்களைக் காப்பாற்றுவதற்காக தேவன் மோசேயை என்ன செய்யச் சொன்னார்?<br>☐ எகிப்திய இராணுவத்திற்கு என்ன ஆனது?<br>☐ நடந்ததைக் கண்ட இஸ்ரவேலர் என்ன செய்தார்கள்? |

B 10 கதை 4

# மோசேயும் இஸ்ரவேலரும் தேவனுக்கு நன்றிசெலுத்துகிறார்கள் - தேவனைத் துதிப்பதைப் பற்றியது

**நாம் அறிந்துகொள்வது:**

* இஸ்ரவேலர் தங்களுக்கு சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் கொடுப்பதற்காக தேவன் செய்த எல்லாவற்றிற்கும் நன்றி தெரிவித்தனர்..
* நாம் அனைவரும் நின்றுஇ திரும்பிப் பார்த்துஇ தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்த காரியங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

**முக்கிய வசனம்: சங்கீதம் 106: 1**

**வேத பாகம்: யாத்திராகமம் 15: 1-22**

### அறிமுகப்படுத்துங்கள்

பைபிள் நாட்களில் நடந்த சில அற்புதமான விஷயங்களை நினைவுபடுத்த சூசக குறிப்புகளைப் பயன்படுத்தவும். எ.கா. கடந்த வாரம் கதையில் நடந்த போலவே செங்கடலைக் கடப்பது உட்படஇ தாவீது கோலியத்தைக் கொன்றதுஇ சிங்கக் குகையில் தானியேல் காப்பாற்றப்பட்டது ஆகியவை. உங்களிடம் ஒரு பைபிள் இருந்தால் காலவரிசையில் நிகழ்வுகளைக் கண்டறியவும். இவை ஒவ்வொன்றிலும்இ தேவனின் மகா வல்லமையை நம்புவதைத் தவிர வேறு எந்த வழியும் பைபிள் கதாபாத்திரங்களுக்கு இல்லை என்பதை விளக்குங்கள். தேவன் அவர்களை மீட்ட பிறகு இஸ்ரவேலர் என்ன செய்தார்கள் என்பதைப் பற்றி நாம் காண்போம்இ மேலும் தேவன் நமக்காகச் செய்த காரியங்களுக்காக நாம் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதையும் சிந்திப்போம்.

### கற்றுக்கொடுங்கள்

* இஸ்ரவேலர் கடைசியில் அடிமைகளாக இருப்பதிலிருந்து விடுபட்டார்கள்இ அவர்களுடைய எதிரிகள் அனைவரும் நீரில் மூழ்கடிக்கப்பட்டார்கள். அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்பதை விளக்குங்கள். அவர்களைக் காப்பாற்றியது தேவனே என்பதை அவர்கள் அறிந்தார்கள்இ அவர்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருந்தார்கள்இ தங்களுக்குச் செய்த அனைத்திற்காகவும் தேவனை துதிக்க விரும்பினார்கள். (யாத்திராகமம் 15: 1) தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்இ அவருடைய வல்லமையைப் பாடினார்கள்இ ஏனென்றால் அத்தகைய வல்லமை கொண்ட வேறொரு தேவன் இல்லை என்று அவர்கள் அறிந்தார்கள். (யாத்திராகமம் 15: 11) அவர் அவர்களுக்காகச் செய்த எல்லாவற்றையும் பற்றி அவர்கள் மிக விரிவாகப் பாடினார்கள்.
* நம்மைச் சுற்றியுள்ள படைப்பில் நாம் காண்பவைஇ ஒவ்வொரு நாளும் நம்முடைய அனைத்து தேவைகளையும் பூர்த்திசெய்ய அவர் செய்த ஏற்பாடுஇ நமக்காக சிலுவையில் மரிக்க அவருடைய குமாரனை அனுப்புவதில் அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பு ஆகியவற்றிலிருந்து தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை குழந்தைகள் உணர வேண்டும்.
* இஸ்ரவேலர் தேவனைப் பற்றி மட்டும் பாடவில்லைஇ அவர்கள் அவருடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார்கள்இ அவர்கள் அவரை “என் தேவன்”, “என் பலம்”, “என் இரட்சிப்பு” என்று அழைத்தனர். (யாத்திராகமம் 15: 2)
* இஸ்ரவேலர் நிகழ்காலத்தைப் பற்றி மட்டும் சிந்திக்கவில்லைஇ வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தை நோக்கிச் செல்லும்போது மற்ற எதிரிகளுடன் எதிர்கால போர்களுக்காக அவர்கள் அவரை நம்பலாம் என்று அறிந்தார்கள். கர்த்தர் ஒருபோதும் மாறமாட்டார் என்பதையும்இ இன்று மட்டுமல்லஇ எதிர்காலத்திலும் எப்போதும் அவரை நம்பலாம் என்பதையும் நாம் கற்றுக்கொள்ளலாம்.

குழந்தைகளுக்கு அவரை தேவன் என்று மட்டுமே தெரியுமா? அல்லது அவர்கள் தங்கள் சொந்த இரட்சகராக தேவனை அறிந்திருக்கிறார்களா என்று கேட்டு சவால் விடலாம். ஆரோனின் சகோதரி மிரியாம்இ சில பெண்களை பாடல் பாடுவதிலும் நடனமாடுவதிலும் வழிநடத்தினாள். தேவன் செய்ததை அவர்கள் கொண்டாடியபோது அந்தளவுக்கு உற்சாகமாக இருந்தார்கள்.

### கற்றுக்கொள்ளுங்கள்

முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். சங்கீதம் 106:1- இந்த வசனம் கர்த்தருக்கு நன்றி செலுத்துவதைப் பற்றி நமக்கு நினைவூட்டுகிறது. ஆகவேஇ கர்த்தர் தங்களுக்காகச் செய்த காரியங்களுக்காக நன்றி செலுத்தும் சில ஜெபங்களைச் செய்ய குழந்தைகளை ஊக்குவிக்க முடியும்.

### நினைவில்வையுங்கள்

கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பி 10 அனைத்திலும் வினாடி வினாவை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.

- ☐ இஸ்ரவேலர் தாங்கள் சுதந்திரமாக இருப்பதைக் கண்டு என்ன செய்தார்கள்?
- ☐ அவர்கள் தங்கள் பாடலில் தேவனை எவ்வாறு வருணித்தார்கள்?
- ☐ இஸ்ரவேலர் எதிர்காலத்திற்காக தேவனை நம்பினார்கள் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?
- ☐ நடனமாடவும் பாடவும் பெண்களை வழிநடத்தியது யார்?
- ☐ இஸ்ரவேலர் பயப்படுவதிலிருந்தும்இ பீதியிலிருந்தும் மாறி தேவனைப் புகழ்ந்து பாடியது ஏன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

தேவன் உணவைக் கொடுக்கிறார் - இந்தக் கதை இஸ்ரவேலருக்கு தேவன் உணவு அளிப்பதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>∗ தேவன் பாலைவனத்தில் நாற்பது வருடங்கள் இஸ்ரவேலருக்கு உணவு வழங்கினார்.<br>∗ கர்த்தராகிய இயேசு "ஜீவ அப்பம்"இ அவர் நம் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்.<br><br>**முக்கிய வசனம்: யோவான் 6: 35**<br>**வேத பாகம்: யாத்திராகமம் 16: 1 - 32** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பி 9 மற்றும் பி 10 இல் என்ன நடந்தது என்பதை சுருக்கமாக குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். இஸ்ரவேலரை எகிப்திலிருந்து மீட்பதில் தேவன் தம்முடைய வல்லமையைக் காட்டியிருந்தார்இ இப்போது அவர்களை ஒரு புதிய நாட்டிற்கு அழைத்துச் செல்வதாக அவர் உறுதியளித்தார். அவர்கள் வழியில் சில நாட்களிலேயே முணுமுணுக்க ஆரம்பித்து மோசேயிடம் பசியுடன் இருப்பதைப் பற்றி புகார் கூறினர்! அவர்களின் உணவுப் பொருட்கள் தீர்ந்துவிட்டனஇ அவர்கள் எகிப்துக்கு திரும்பிப் போவதைப் பற்றியும் அவர்கள் அங்கு சாப்பிட்ட எல்லா உணவுகளையும் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். (யாத்திராகமம் 16: 2-3) |
| **கற்றுக்கொடுங்கள்** | ∗ மக்கள் தேவனை நம்பத் தவறிய போதிலும்இ அவர் இன்னும் அவர்களை பராமரித்து வருகிறார் என்பதை அவர் காட்டினார். அவர்களுக்கு எப்போதும் உணவு உண்டாயிருப்பதை உறுதிப்படுத்த ஒரு திட்டம் தேவனிடத்திலிருந்தது. அவர் பரலோகத்திலிருந்து அப்பத்தை அனுப்புவார் அவர்கள் ஒவ்வொரு நாளும் காலையிலும் அதைச் சேகரிக்க வேண்டும். வாரத்தின் ஆறாவது நாளில் அவர்கள் ஓய்வுநாளுக்காக கூடிவருவார்கள் (தேவனுடைய சிறப்பு நாள்) அந்த நாளுக்கும் சேர்த்து இரு மடங்கு அதிகமாக சேகரிக்கலாம். ஒவ்வொரு நாள் மாலையும் அவர்களுக்கு இறைச்சி கிடைத்தது. (யாத்திராகமம் 16: 4 - 12)<br><br>∗ இஸ்ரவேலர்கள் காலையில் தங்கள் கூடாரங்களிலிருந்து வெளியே வந்து தாங்கள் கண்டதைப் பற்றி ஆச்சரியப்படுவதை கற்பனை செய்து பாருங்கள். கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த அப்பம் இதுதான் என்று மோசே விளக்கினான். எல்லோரும் தங்கள் கூடாரத்தில் வசிக்கும் நபர்களுக்கு போதுமான அளவு சேகரிக்க வேண்டும். யாரும் எதையும் அடுத்த நாள்வரை மிச்சம் வைத்திருக்கவில்லை. இருப்பினும்இ சிலர் அதை வைத்திருக்க முயன்றனர்இ ஆனால் அடுத்த நாளுக்குள் அது கெட்டுப்போயிற்று. (யாத்திராகமம் 16: 15 - 20) நம்முடைய சொந்த காரியத்தைச் செய்வதை விட தேவன் சொல்வது போலவே செய்வதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுங்கள்.<br><br>∗ மக்கள் பரலோகத்திலிருந்து வந்த அப்பத்தை "மன்னா" என்று அழைத்தனர். அது தேன் போல சுவைத்தது! இஸ்ரவேலரின் பயணம் நீடித்தவரை தேவன் மன்னாவை அனுப்பினார். அவர் அவர்களுடைய தேவன் என்பதையும்இ அவர்களைக் கவனிப்பார் என்பதையும் தேவன் இன்னும் அதிக ஆதாரமாகக் கொடுத்தார். (யாத்திராகமம் 16: 31)<br><br>∗ பல வருடங்களுக்குப் பிறகுஇ நம்முடைய பாவங்களுக்காக மரிக்க இயேசு பரலோகத்திலிருந்து இறங்கிவந்தார். அவர் தன்னை "ஜீவ அப்பம்" என்று அழைத்தார். கர்த்தராகிய இயேசுவை (ஜீவ அப்பம்) நம் வாழ்வில் பெற்றால்இ அவர் நமக்கு நித்திய ஜீவனைத் தருகிறார் □ இந்த வாழ்க்கையை இங்கேயும் பரலோகத்திலும் நாம் அனுபவிக்கலாம். பரலோகத்திலிருந்து வந்த மன்னா இஸ்ரவேலர்களுக்கு ஒரு அற்புதமான அதிசயம்இ ஆனால் கர்த்தராகிய இயேசுவைப் பெறுவதன் மூலம் நாம் இதைவிட மிகப் பெரிய ஒன்றைப் பெறலாம். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யோவான் 6: 35. மேலே கூறப்பட்டதை வலியுறுத்துங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | இந்த கேள்விகளை வினாடி வினாவில் பயன்படுத்தவும்.<br>□ மக்கள் ஏன் முணுமுணுத்தார்கள்?<br>□ அவர்கள் யாரிடம் புகார் செய்தார்கள்?<br>□ புகார் செய்வதற்குப் பதிலாக அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்?<br>□ ஒவ்வொரு வாரமும் எத்தனை நாட்கள் தரையில் மன்னா காணப்பட்டது?<br>□ ஒவ்வொரு நாள் மாலையும் அவர்கள் என்ன கண்டார்கள்?<br>□ அவர்கள் எவ்வளவு காலம் மன்னாவை சேகரித்தார்கள்?<br>□ இயேசு தமக்கு என்ன பெயரைப் பயன்படுத்தினார்?<br>□ மன்னாவை விட இயேசு எந்த வகையில் பெரியவர்? |

B 11 கதை 2

தேவன் வெற்றியைத் தருகிறார் - தேவன் தம்மை நம்புபவர்களுக்கு உதவிசெய்வதைப் பற்றிய கதை

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* இஸ்ரவேலர்கள் தம்மை நம்பியிருந்தபோது தேவன் அவர்களுக்கு உதவினார்.<br>* நம்முடைய வாழ்க்கையில் வெற்றியைப் பெற நாம் அவரிடத்தில் ஜெபிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.<br><br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 17: 15**<br>**வேத பாகம்: யாத்திராகமம் 17: 8 - 15** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | விரைவில் இஸ்ரவேலர் மற்றொரு சிக்கலை எதிர்கொண்டனர். அமலேக்கியர்கள் என்று அழைக்கப்படும் ஒரு எதிரி இராணுவம் அவர்களைத் தாக்கத் தொடங்கியது. (யாத்திராகமம் 17: 8)<br>☐ இஸ்ரவேலர் என்ன செய்ய வேண்டியிருந்தது? (எதிர்த்துப் போராட)<br>☐ அவர்கள் இதற்குமுன் போர் செய்துகொண்டிருந்தார்களா?<br>☐ அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள்?<br>☐ தேவனின் உதவியை அவர்கள் நம்ப முடியுமா? தேவன் அவர்களை ஒரு புதிய தேசத்திற்கு கொண்டுப் போக எகிப்திலிருந்து அவர்களை வெளியே கொண்டுவந்ததை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். அவர் தமது வாக்குறுதியை நிறைவேற்றுவார். |
| **கற்றுக்கொடுங்கள்** | * மோசே ஒரு புத்திசாலித் தலைவனாக இருந்தான்இ என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியும். அவன் தனது உதவியாளரான யோசுவாவிடம் ஒரு இராணுவத்தை தேர்வு செய்யச் சொன்னான். இராணுவத்திற்கு தேவனின் உதவி தேவை என்று மோசே அறிந்துஇ அவன் ஆரோனுடன் போர்க்களத்தில் நடப்பதைக் காண ஒரு மலையின் உச்சிக்குச் சென்றான். மோசே தனது இரண்டு கைகளையும் பயன்படுத்தி கோலை தனது தலைக்கு மேலே பிடித்தான் (தான் ஒரு மேய்ப்பனாக இருந்தபோது பயன்படுத்திய நீண்ட கோல்). இஸ்ரவேலர் வெற்றிபெற தேவனை நம்புகிறார்கள் என்பதைக் காட்டும் ஒரு வழி இது என்பதை விளக்குங்கள். (யாத்திராகமம் 17: 9)<br>* ☐ மோசே இப்படிச் செய்தவரைஇ இஸ்ரவேலர் வெற்றி பெற்றார்கள். குழந்தைகளை அவர்களின் தலைக்கு மேலே கைகளை வைத்திருக்கச் சொல்லுங்கள். நீங்கள் நீண்ட நேரம் அவற்றை அப்படியே வைத்திருக்க வேண்டியிருந்தால் உங்கள் கைகளுக்கு என்ன நடக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? விரைவில் மோசேயின் கைகள் சோர்ந்துபோய்இ ஓய்வெடுக்க அவைகளை கீழே இறக்கினான். அப்பொழுது எதிரிகள் வெல்ல ஆரம்பித்தனர். ஆரோனும் ஊரும் மோசேக்கு எவ்வாறு உதவியிருக்கலாம் என்று குழந்தைகளிடம் கேளுங்கள்இ பின்னர் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதைத் தெளிவுபடுத்துங்கள். மோசே சூரிய அஸ்தமனம் வரை தன் கரங்களை உயர்த்த முடிந்ததுஇ அந்த நேரத்தில் இஸ்ரவேலர் வென்றார்கள். வெற்றிக்காக மோசே தேவனுக்கு நன்றி சொல்ல விரும்பினான்இ எனவே அவன் ஒரு கல்லால் ஆன பலிபீடத்தை கட்டிஇ “கர்த்தர் என் கொடி” என்று அழைத்தான். வெற்றிக்கான எல்லா மகத்துவத்தையும் தேவன் பெற வேண்டும் என்று மோசே விரும்பினான் என்பதை விளக்குங்கள். (யாத்திராகமம் 17: 10 - 13, 15)<br>* போரில் வெற்றி பெறுவதில் மிக முக்கியமான பங்கு யாருக்கு இருந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? யோசுவாவும் மோசேயும் தேவனைச் சார்ந்து அவரிடம் கைகளைத் தூக்கவில்லை என்றால் வீரர்கள் இந்த போரில் வெற்றி பெற்றிருக்க முடியாது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை நாம் இரட்சகராக நம்பியிருந்தால்இ நமக்கும் ஒரு எதிரி இருக்கிறான் - சாத்தான். அவன் நம்மை பயப்பட வைக்க விரும்புகிறான்இ நம் வாழ்வில் உள்ள மகிழ்ச்சியை பறிக்க விரும்புகிறான். கர்த்தராகிய இயேசுவோ சாத்தானோ யார் அதிக வல்லமையுள்ளவர்? இயேசு அதிக வல்லமையுள்ளவர் என்பதால்இ நாம் வெற்றிபெற முடியும். நாம் எப்போதும் அவரைச் சார்ந்து இருக்க வேண்டும். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யாத்திராகமம் 17: 15. |
| **நினைவில்வையுங்கள்** | குழந்தைகள் “கர்த்தர் என் ஜெயக்கொடி” என்று ஒரு பெரிய அலங்கரிக்கப்பட்ட பேனரை உருவாக்கலாம்.<br>இல்லையென்றால் இந்தக் கேள்விகளை வினாடி வினாவில் பயன்படுத்தலாம்:<br>☐ இஸ்ரவேல் இராணுவத்தின் தலைவர் யார்?<br>☐ மோசே எங்கே போனான்?<br>☐ மோசேயுடன் சென்றவர்கள் யார்?<br>☐ மோசே தன் கைகளை உயர்த்திப் பிடித்தபோது போரில் என்ன நடந்தது?<br>☐ மோசே எவ்வளவு நேரம் கைகளை உயர்த்திப்பிடித்தான்?<br>☐ வெற்றியைக் கொடுத்தது யார்? |

B 11 கதை 3

தேவன் கட்டளைகளைக் கொடுக்கிறார் - இந்தக் கதை தேவனுடைய சட்டங்களைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தேவன் பரிசுத்தர்.<br>* தேவனுடைய கட்டளைகளை நாம் கடைப்பிடிக்க முடியாமல் இருக்கிறோம்.<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 20: 1 அல்லது ரோமர் 3: 23**<br>**வேத பாகம்: யாத்திராகமம் 19 - 20** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பள்ளி அல்லது வீட்டுச் சூழலில் உங்களிடம் உள்ள விதிகளைப் பற்றி பேசுங்கள். அவை என்ன? நமக்கு ஏன் விதிகள் உள்ளன? விதிகளை கடைபிடிப்பது எப்போதும் எளிதானதா? இன்றைய பாடத்தில்இ தேவன் தம்முடைய விதிகளை இஸ்ரவேலருக்கு எப்படிக் கொடுத்தார் என்பதைப் பற்றி அறிந்து கொள்வோம். |
| **கற்றுக்கொடுங்கள்** | * இஸ்ரவேலர் சீனாய் என்ற பெரிய மலைக்கு வந்து அங்கு முகாம் அமைத்தனர். தேவன் கார்மேகத்தில் மலையின் உச்சியில் இறங்குவார் என்று மோசேக்கு விளக்கினார். மக்கள் மேலே ஏற முயற்சிசெய்யாமல் இருக்க அவன் மலையின் அடிவாரத்தில் அடையாளக் கற்களை வைக்க வேண்டும். மக்கள் தங்களைக் கழுவி தயார் செய்திருந்தாலும்இ அவர்கள் செய்த பாவத்தால் அவர்கள் தேவனிடம் நெருங்கி வர முடியாது. (யாத்திராகமம் 19: 1 - 14)<br>* மூன்று நாட்களுக்குப் பிறகு மக்கள் மலையின் அடிவாரத்தில் நின்றனர். மலையிலிருந்து புகை புறப்பட்டதுஇ அது அதிர்ந்தது. தேவன் எவ்வளவு வல்லமையுள்ளவர் என்பதை இது மக்களுக்குக் காட்டியது என்பதை விளக்குங்கள். மக்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்பதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். பின்னர் மோசேயை இரண்டாவது முறையாக வரும்படி தேவன் அழைத்தார்இ மக்களை கீழே இருக்குமாறு எச்சரிக்கும்படி மோசேயிடம் கூறினார். (யாத்திராகமம் 19: 16 - 22) தேவன் பரிசுத்தராக (எந்த பாவமும் இல்லாமல்) இருப்பதால் மக்களால் அவரை நெருங்க முடியவில்லைஇ ஆனால் அவர்கள் வாழ்க்கையில் பாவம் இருந்தது என்பதை விளக்குங்கள். இன்றுஇ நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படாவிட்டால் பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கும்.<br>* பின்னர்இ மோசே தேவனிடமிருந்து பத்து கட்டளைகளைப் பெற்றான்இ இது இரண்டு பெரிய கற்பலகைகளில் எழுதப்பட்டது. கட்டளைகள் தேவனுடைய விதிகள் அல்லது சட்டங்கள்இ மேலும் மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை அவை தெளிவுபடுத்தின. அவர்கள் மற்றவர்களை விட தேவனை அதிகமாக நேசிக்க வேண்டும்இ அவர்களும் ஒருவருக்கொருவர் நேசிக்க வேண்டும். நிலை 2 குழந்தைகளுடன்இ இவற்றைப் படித்து ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குவது பொருத்தமானது. நாம் அவைகளுக்குக் கீழ்ப்படியத் தவறியிருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுங்கள்! (யாத்திராகமம் 20)<br>* இஸ்ரவேலர்களால் தேவனின் சட்டங்களைக் கடைப்பிடிக்க முடியவில்லைஇ நம்மாலும் முடியாது என்பது பரிதாபத்துக்குரியது. நாம் அனைவரும் தேவன் எதிர்பார்க்கும் காரியத்தில் தவறியவர்களாய் இருக்கிறோம். நாம் பாவிகள். கர்த்தராகிய இயேசு மட்டுமே பூமியில் சரியான வாழ்க்கை வாழ்ந்தார். இதனால்தான் அவர் நம் இரட்சகராக இருக்க முடிகிறது. தேவன் நம்மை மன்னிக்கும்படி நமது பாவங்களுக்கான தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டு மரித்தார். அதனால் நாம் தேவனின் குடும்பத்தில் இருக்க முடியும்இ இஸ்ரவேலர் செய்ததைப் போல அவரிடமிருந்து விலகி இருக்க வேண்டியதில்லை. |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யாத்திராகமம் 20: 1 அல்லது ரோமர் 3: 23. |
| **நினைவில்வையுங்கள்** | வினாடி வினாவுக்கு நீங்கள் நிலை 2 பாடத்தில் எழுதப்பட்ட உண்மையான கட்டளைகளில் கவனம் செலுத்தலாம். முடிந்தால் அவற்றை ஒரு பலகை ∴ விளக்கப்படத்தில் எழுதிக் கொள்ளுங்கள்இ இதனால் குழந்தைகள் அவற்றைப் பார்க்கவும் கேட்கவும் முடியும். நீங்கள் அவற்றை எல்லாம் படித்த பிறகுஇ பட்டியலை அகற்றவும். ஒவ்வொரு கட்டளையிலும் ஒரு முக்கிய வார்த்தையை விட்டுவிடுங்கள்.<br>எ.கா. எனக்கு முன் வேறு --------- இருக்க வேண்டாம். எந்த ------------------- செய்ய வேண்டாம்.<br>விடுபட்ட வார்த்தையை ஒரு குழந்தை அறிந்திருந்தால்இ அவர்கள் தங்கள் அணிக்கு ஒரு புள்ளியைப் பெறலாம். |

B 11 கதை 4

இரட்சிப்பைக் கொடுக்கிறார்-மக்களை மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்கான தேவனுடைய வழியைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* இஸ்ரவேலருக்குத் தண்டனையிலிருந்து தப்பிக்க தகுந்த ஒரு வழியை தேவன் ஏற்படுத்தினார்.<br>* நாம் இரட்சிக்கப்படுவதற்கு தேவன் ஒரு வழியை வழங்கியுள்ளா<br><br>**முக்கிய வசனம்: யோவான் 3: 14**<br>**வேத பாகம்: எண்ணாகமம் 21: 4 - 9** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | சில நேரங்களில் அதே தவறை மீண்டும் செய்கிறோம்! இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கொண்டு வந்த உணவு தீர்ந்தபோது அவர்கள் செய்தது ஞாபகமிருக்கிறதா? ஆம்இ அவர்கள் முணுமுணுத்து புகார் செய்தனர்! இன்றைய கதையில் அவர்கள் மீண்டும் முணுமுணுக்கிறார்கள்! அதற்கான காரணத்தைக் கண்டுபிடிப்போம். ஒரு பாம்பு கடித்தால் ஏற்படும் ஆபத்துஇ மருத்துவமனைக்குச் சென்று விஷமுறிவு சிகிச்சைப் பெற வேண்டிய அவசியம் பற்றி பேசுங்கள். இன்றைய கதையில் பாம்பினால் கடிபட்டவர்களுக்கு தேவன் மிகவும் வித்தியாசமான சிகிச்சை அளித்தார். |
| **கற்றுக்கொடுங்கள்** | * இஸ்ரவேலர் மோசேக்கு எதிராகவும் தேவனுக்கு எதிராகவும் பேசினார்கள்இ எகிப்தில் காரியங்கள் சிறப்பாய் இருந்தது எனக் கூறிஇ தேவன் வழங்கிய மன்னாவை அவர்கள் வெறுத்தார்கள் என்பது சங்கடத்துக்குரிய காரிமாகும். அவர்கள் எவ்வளவு நன்றியற்றவர்களாக இருந்தனர்! (எண்ணாகமம் 21: 5)<br>* இந்நேரத்தில் தேவன் மக்கள் மீது கோபமடைந்து அவர்களை தண்டிக்க தீர்மானித்தார். விரைவில் முகாமை விஷ பாம்புகள் படையெடுத்தன. மக்களுக்கு என்ன நேரும்? ஆம்இ அவை மக்களைக் கடித்தனஇ அவர்களில் பலர் இறந்தார்கள். இது தங்களுடைய தவறு என்று மக்களுக்குத் தெரியும். அவர்கள் மோசேயிடம் வந்து தாங்கள் பாவம் செய்ததாகக் கூறிஇ பாம்புகளை அகற்ற தேவனிடம் ஜெபிக்கும்படி கேட்டார்கள். (எண்ணாகமம் 21: 6 - 7) நாம் தவறு செய்துவிட்டபோது காண்பிக்கவேண்டிய சரியான அணுகுமுறை இது என்பதை குழந்தைகள் உணர உதவுங்கள். நாம் நமது பாவத்தை ஒப்புக் கொண்டுஇ நமக்கு உதவும்படி தேவனிடம் கேட்க வேண்டும்.<br>* மோசே தேவனிடம் ஜெபித்த பிறகுஇ தேவன் ஒரு விசித்திரமான காரியத்தைச் செய்யும்படி மோசேயிடம் சொன்னார். அவன் வெண்கலத்தாலான ஒரு சர்ப்பத்தை உருவாக்கி முகாமில் உள்ள உயரமான ஒரு கம்பத்தில் வைக்க வேண்டும். அனைவரும் பார்க்கும் வித்ததில் பிரகாசிக்கும் வெண்கல சர்ப்பத்தை வைக்க வேண்டும். கம்பத்தில் இருக்கும் சர்ப்பத்தைப் பார்த்தால் கடிபட்ட எவரும் இறக்க மாட்டார்கள் என்று தேவன் வாக்குறுதி அளித்தார். இதை நம்பிஇ தேவன் சொன்னபடி செய்த அனைவரும் பிழைத்துக்கொண்டார்கள். மரணத்திலிருந்து தப்பிக்க என்ன ஒரு சுலபமான வழி! (எண்ணாகமம் 21: 8 - 9) (நீங்கள் அறிமுகத்தில் இரண்டாவது யோசனையைப் பயன்படுத்திஇ ஒரு ஒப்பீடு செய்யலாம்.) இஸ்ரவேலர் தேவனின் அறிவுறுத்தலுக்குக் கீழ்ப்படிந்தார்கள் என்று நினைக்கிறீர்களா? ஏன்? அவர்கள் பிழைத்திருப்பதற்கான ஒரே வழி இதுதான் என்பதை வலியுறுத்துங்கள் - வேறு எதையும் முயற்சிப்பதில் பயனில்லை!<br>* பல வருடங்கள் கழித்துஇ அனைவருக்கும் ஒரு முக்கியமான பாடம் கற்பிக்க இந்தக் கதையைப் பயன்படுத்தினார். நாம் இஸ்ரவேலரைப் போல இருக்கிறோம், ஏனென்றால் நாம் தேவனுக்கு எதிராக பாவம் செய்தோம், நமது பாவங்கள் தண்டிக்கப்படும். ஆனால் நம்முடைய பாவங்களுக்கான தண்டனையிலிருந்து தப்பிக்க தேவன் நமக்கு ஒரு வழியை வழங்கியுள்ளார். நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்தபோது அவரும் “உயர்த்தப்பட வேண்டும்” என்று இயேசு விளக்கினார். இயேசு நமக்காகச் செய்தவற்றில் நாம் நம்முடைய நம்பிக்கையை வைக்கும்போதுஇ தேவன் நம்மை இரட்சித்து நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யோவான் 3: 14. இவை இயேசுவின் வார்த்தைகள் என்று குறிப்பிடுங்கள். சிலுவையில் உயர்த்தப்படும்போது அவர் எவ்வாறு நம்மைக் காப்பாற்ற முடியும் என்பதை அவர் விளக்கினார். |
| **நினைவில்வையுங்கள்** | கம்பத்தில் வெண்கல பாம்பின் ஒரு படத்தொகுப்பை ஒரு சிறிய குழந்தைகள் குழு உருவாக்கலாம்இ மற்றொரு குழு சிலுவையை உருவாக்கலாம். அதை உருவாக்கி பிறகு அதன் மேல்பாகத்தில் வசனத்தை எழுதிவைக்கலாம்.<br>அல்லது B 11 இல் உள்ள அனைத்து கதைகளையும் அடிப்படையாகக் கொண்டு வினாடி வினா நடத்தலாம்.<br>B 11 இல் கூடுதல் கேள்விகள் பின்வருமாறு:<br>☐ இந்த நேரத்தில் இஸ்ரவேலர் என்ன புகார் கொடுத்தார்கள்?<br>☐ தேவன் அவர்களை எவ்வாறு தண்டித்தார்?<br>☐ பாம்பு கடியிலிருந்து குணமடைய மக்கள் என்ன செய்ய வேண்டும்?<br>☐ நம்முடைய பாவங்களுக்கான தண்டனையிலிருந்து நாம் எவ்வாறு காப்பாற்றப்பட முடியும்? |

B 12 கதை 1

யோசேப்பும் தேவதூதனும் - கடினமாக இருந்தபோதும் யோசேப்பு தேவனுக்குக் கீழ்ப்படிவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* ‘இயேசு’ என்ற பெயருக்கு ‘இரட்சகர்’ என்று அர்த்தம்.<br>* யோசேப்பைப் போலவேஇ நாமும் எப்போதும் தேவனுக்குச் செவிசாய்த்துக் கீழ்ப்படிய வேண்டும்.<br><br>**முக்கிய வசனம்: மத்தேயு 1: 21**<br>**வேத பாகம்: மத்தேயு 1: 18-25** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பெயர்களைப் பற்றி பேசுங்கள் - குழந்தைகளிடம் அவர்களுடைய பெயர்களின் அர்த்தம் என்ன என்று அவர்களுக்குத் தெரியுமா அல்லது ஏன் அவர்களுக்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டது என்று கேளுங்கள்.<br><br>இன்று குழந்தைகள் பைபிளில் மிகவும் சிறப்புவாய்ந்த ஒரு குழந்தையைப் பற்றி கற்றுக்கொள்வார்கள் என்பதை விளக்குங்கள். கதை யாராக இருக்கும் என்று யூகிக்க குழந்தைகளை அனுமதியுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * யோசேப்பும் மரியாளும் திருமணம் செய்துகொள்ள திட்டமிட்டிருந்தனர்இ ஆனால் ஒரு நாள் மரியாள் யோசேப்பிடம் தான் ஒரு குழந்தையை எதிர்பார்ப்பதாக சொன்னாள். தான் குழந்தையின் தந்தை அல்ல என்று யோசேப்பு அறிந்திருந்தார்இ எனவே மரியாளை திருமணம் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்தார். (மத்தேயு 1: 18-19)<br><br>* ஒரு இரவில் யோசேப்புக்கு ஒரு கனவு வந்தது. கனவில் ஒரு தேவதூதன் தோன்றி யோசேப்புடன் பேசினான். தேவதூதன் “மரியாளை உன் மனைவியாக ஏற்றுக்கொள்ள பயப்பட வேண்டாம்இ ஏனென்றால் குழந்தை பரிசுத்த ஆவியினால் உற்பவித்தது” என்று கூறினான். (மத்தேயு 1: 20) குழந்தை தேவனுடைய குமாரனாக இருப்பார் என்பது இதன் பொருள் என்று குழந்தைகளுக்கு விளக்குங்கள்.<br><br>* தேவதூதன் யோசேப்பிடம் குழந்தையை ‘இயேசு’ என்று அழைக்க வேண்டும்இ ஏனெனில் அவர் மக்களை அவர்களின் பாவங்களிலிருந்து இரட்சிப்பார் என்றான். (மத்தேயு 1: 21) இயேசு என்றால் “இரட்சகர்” என்று அர்த்தம் என்பதை விளக்குங்கள். ஒரு இரட்சகர் என்றால் என்ன என்பதைப் பற்றி விவாதிக்கவும் (அன்றாட வாழ்க்கையில்இ நீரில் மூழ்கும் ஆபத்தில் இருக்கும் ஒருவருக்கு ஒரு மீட்பர் அல்லது காப்பாற்றுபவர் தேவை. நமக்கு ஏன் ஒரு இரட்சகர் தேவை என்று குழந்தைகளிடம் கேளுங்கள் (அதாவது நாம் பாவம் செய்ததால்). நம்முடைய இரட்சகராக இருப்பதற்கு இயேசு என்ன செய்தார் என்று குழந்தைகளிடம் கேளுங்கள். (அதாவது அவர் பரலோகத்திலிருந்து வந்து நமக்காக சிலுவையில் மரித்தார்)<br><br>* யோசேப்பு தனது கனவிலிருந்து எழுந்தபோதுஇ தேவதூதன் சொன்னபடியே மரியாளை திருமணம் செய்தார். சிறிது காலம் கழித்து குழந்தை பிறந்ததுஇ யோசேப்பு அவருக்கு ‘இயேசு’ என்று பெயரிட்டார். (மத்தேயு 1: 24-25) யோசேப்புக்கு வழங்கப்பட்ட வழிமுறைகளைப் பற்றி குழந்தைகளிடம் கேளுங்கள்இ அவர் அவைகளை எவ்வாறு பின்பற்றினார் என்பதைப் பற்றி விவாதிக்கவும். தேவனுடைய அறிவுரைகளை பைபிளில் கேட்டு அவற்றைப் பின்பற்றுவது எவ்வளவு முக்கியம் என்பதை விளக்குங்கள். ஒன்றாக சேர்ந்துஇ சிந்தித்துஇ தேவன் நமக்கு வழங்கிய சில அறிவுரைகளின் பட்டியலை உருவாக்கவும். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். மத்தேயு 1: 21. |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>☐ யோசேப்பு யாரை திருமணம் செய்யப் போகிறான்?<br>☐ யோசேப்புக்கு மரியாள் என்ன செய்தி சொன்னாள்?<br>☐ தேவன் யோசேப்புடன் எப்படி பேசினார்?<br>☐ குழந்தையின் தந்தை யார்?<br>☐ குழந்தை என்ன பெயரில் அழைக்கப்பட்டது?<br>☐ ‘இயேசு’ என்ற பெயரின் அர்த்தம் என்ன?<br>☐ கனவிலிருந்து எழுந்த பிறகு யோசேப்பு என்ன செய்தான்?<br>☐ நாம் பின்பற்ற தேவன் கொடுத்த ஒரு கட்டளையைப் பற்றி சிந்தியுங்கள். |

B 12 கதை 2

ஏரோதும் ஞானிகளும் - இந்தக் கதை ஞானிகள் இயேசுவைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* இயேசு ராஜாதி ராஜா.<br>* இயேசு ஆராதிக்கப்படுவதற்கு தகுதியானவர்.<br>**முக்கிய வசனம்: மத்தேயு 2: 2**<br>**வேத பாகம்: மத்தேயு 2: 1-8** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | முக்கியமான நபர்களைப் பற்றி சிந்திக்க குழந்தைகளிடம் கேளுங்கள். அவர்களின் பட்டியலை உருவாக்கவும்.<br>கலந்துரையாடுங்கள் - அந்த நபர்களில் யாரையாவது நீங்கள் சந்திக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் என்ன சொல்வீர்கள்? நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் அவர்களை எவ்வாறு நடத்துவீர்கள்? இதுவரை வாழ்ந்தவர்களிலேயே மிக முக்கியமான நபரைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு பயணத்தில் சென்ற சில மனிதர்களைப் பற்றி இன்று நாம் கற்றுக் கொள்வோம் என்று குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * வானத்தில் ஒரு புதிய நட்சத்திரம் தோன்றியது. இது ஒரு புதிய ராஜா பிறக்கிறார் என்பதின் அடையாளம் என்று கிழக்கில் உள்ள ஞானிகள் அறிந்தார்கள். புதிய ராஜாவைத் தேடுவதற்காக அவர்கள் எருசலேமுக்குச் சென்றார்கள். அவர்கள் ஏரோது ராஜாவிடம் சென்றுஇ "யூதருக்கு ராஜாவாகப் பிறந்தவர் எங்கே? அவருடைய நட்சத்திரம் வானத்தில் தோன்றியபோது அதைக் கண்டோம்இ அவரை வணங்க வந்திருக்கிறோம்". (மத்தேயு 2: 1-2) பிறக்கவிருந்த புதிய ராஜா இயேசுஇ தேவனுடைய குமாரன் என்றும் இதுவரை வாழ்ந்த வேறு எந்த ராஜாவை விடவும் அவர் பெரியவர் என்றும் குழந்தைகளுக்கு விளக்குங்கள். இயேசு ராஜாதி ராஜா. முந்தைய பாடத்திலிருந்து இயேசுவின் பெயர் என்ன என்பதை நினைவுகூர முடியுமா என்று குழந்தைகளிடம் கேளுங்கள். ஞானிகள் ராஜாவை 'வணங்க வேண்டும்' என்று சொன்னபோது அவர்கள் என்ன அர்த்ததில் அப்படிச் சொன்னார்கள் என்று விவாதிக்கவும்? இயேசு ஏன் வணங்கப்படுவதற்கு தகுதியானவர்?<br>* ஒரு புதிய ராஜாவைப் பற்றி ஏரோது கேள்விப்பட்டபோது அவன் கவலைப்பட்டான். வேறு எவரும் ராஜ பதவியில் இருப்பதை அவன் விரும்பவில்லை. அவன் தனது ஆலோசகர்களில் சிலரை அழைத்து புதிய ராஜா எங்கே பிறக்க வேண்டும் என்று கேட்டான். அவர்கள் வேதவசனங்களைத் தேடிஇ குழந்தை பெத்லகேம் என்ற ஊரில் பிறக்க வேண்டும் என்பதைக் கண்டுபிடித்தார்கள். மத்தேயு 2: 3-6)<br>* ஏரோது ஞானிகளை தனியே அழைத்துஇ "போய் குழந்தையைக் கண்டுபிடியுங்கள்இ நீங்கள் அவ்வரக் கண்டதும்இ திரும்பி வந்து அவர் எங்கே இருக்கிறார் என்று சொல்லுங்கள்இ நானும் போய் அவரை வணங்குவேன் அல்லவா" என்றான். (மத்தேயு 2: 7-8) ஏரோது உண்மையில் புதிய ராஜாவை வணங்க விரும்பவில்லை என்பதை விளக்குங்கள்; அவன் உண்மையில் அவரைக் கொல்ல விரும்பினான். ஏரோது புதிய ராஜாவை ஏன் கொல்ல விரும்பினான் என்று நினைக்கிறீர்கள் என்று குழந்தைகளிடம் கேளுங்கள். இன்றும் பலர் இயேசுவை அவர்கள் கனப்படுத்த வேண்டிய விதத்தில் கனப்படுத்துவதில்லை என்பதை விளக்குங்கள்இ ஆனால் ஞானிகளைப்போல நாமும் இயேசுவை நேசிக்கவும் வணங்கவும் வேண்டும் என தேவன் விரும்புகிறார். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். மத்தேயு 2: 2. |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>☐ வானத்தில் என்ன தோன்றியது?<br>☐ ஞானிகள் எந்த திசையில் இருந்து வந்தார்கள்?<br>☐ புதிய ராஜாவைத் தேடி அவர்கள் எங்கு சென்றார்கள்?<br>☐ அவர்கள் பேசிய ராஜாவின் பெயர் என்ன?<br>☐ புதிய ராஜாவைப் பற்றி ஏரோது ராஜா கேள்விப்பட்டபோது எப்படி உணர்ந்தான்?<br>☐ ராஜா எந்த ஊரில் பிறக்க வேண்டும் என்பதை அவர்கள் கண்டுபிடித்தார்கள்?<br>☐ ஏரோது ஞானிகளிடம் என்ன செய்யச் சொன்னான்?<br>☐ வேறு எந்த ராஜாவையும் விட பெரியவர் யார்? |

B 12 கதை 3

ஞானிகளும் இயேசுவும்-ஞானிகள் நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்து இயேசுவைக் கண்டுபிடிப்பதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* ஞானிகள் இயேசுவை பணிந்துகொண்டுஇ அவருக்கு மிகவும் சிறப்பான பரிசுகளை வழங்கினர் ஏனெனில்இ அவர் மானிடப் பிறவியிலேயே மிக முக்கியமான குழந்தை.<br>* அவர் செய்த எல்லாவற்றிற்கும் நாம் இயேசுக்கு நன்றி செலுத்துவதன மூலம் அவரைப் பணிந்துகொள்ளலாம்.<br>**முக்கிய வசனம்: மத்தேயு 2: 11**<br>**வேத பாகம்: மத்தேயு 2: 9-12** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | கலந்துரையாடல் - உங்களுக்கு இதுவரை வழங்கப்பட்டதில் சிறந்த பரிசு எது? (குழந்தைகள் அதன் படத்தை வரையலாம்). நீங்கள் ஒரு புதிய குழந்தையைப் பார்க்கப் போகிறீர்கள் என்றால்இ அதற்கு என்ன பரிசைக் கொண்டு போவீர்கள்?<br>ஞானிகள் கொடுத்த பரிசுகளைப் பற்றி இன்று நாம் கற்றுக் கொள்வோம் என்பதை குழந்தைகளுக்கு விளக்குங்கள்.<br>முந்தைய பாடத்தில் ஞானிகளைப் பற்றி அவர்கள் கற்றுக்கொண்டதை உங்களிடம் சொல்லும்படி குழந்தைகளிடம் கேளுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * ஞானிகள் ஏரோதை விட்டு புறப்பட்டு தங்கள் வழியில் சென்றார்கள். அவர்கள் மீண்டும் நட்சத்திரத்தைப் பார்த்தார்கள்இ அது அவர்களை இயேசு இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றது. மீண்டும் நட்சத்திரத்தைப் பார்த்தது மிகவும் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருந்தது. (மத்தேயு 2: 9-10) கலந்துரையாடுங்கள் - ஞானிகள் நட்சத்திரத்தைப் பார்த்தபோது ஏன் மிகவும் உற்சாகமடைந்தார்கள் என்று நினைக்கிறீர்கள்?<br><br>* பெத்லகேமில் யோசேப்புஇ மரியாள் மற்றும் குழந்தை இயேசு தங்கியிருந்த வீட்டை ஞானிகள் சென்றடைந்தனர். அவர்கள் உள்ளே சென்றுஇ இயேசுவைக் கண்டதும் சாஷ்டாங்கமாய் விழுந்து அவரை வணங்கினார்கள். பொன்இ வெள்ளைப்போளம் மற்றும் தூபவர்க்கம் என மூன்று பரிசுகளை அவர்கள் அவருக்கு வழங்கினார்கள். (மத்தேயு 2: 11) இந்தப் பரிசுகள் ஒரு குழந்தைக்கு அவர்கள் கொடுக்கக்கூடியதாக இருக்கிறதா என்று குழந்தைகளிடம் கேளுங்கள். இந்த பரிசுகள் மிகவும் விலையுர்ந்தவை என்பதை விளக்குங்கள்இ பொதுவாக ஒரு ராஜாவுக்கு மட்டுமே இப்படி வழங்கப்படும். கலந்துரையாடுங்கள் - இந்தப் பரிசுகளை குழந்தை இயேசுவுக்கு கொடுக்க ஞானிகள் ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்று நினைக்கிறீர்கள்? ஞானிகள் அளித்ததைப் போன்ற பரிசுகளை நம்மால் கொடுக்க முடியாது என்றாலும்இ அவர் செய்த எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்துவதன் மூலமும்இ அவரைப் பிரியப்படுத்தும் காரியங்களைச் செய்வதன் மூலமும் தேவனை பணிந்துகொள்ள முடியும் என்பதை விளக்குங்கள்.<br><br>* சிறிது காலத்திற்குப் பிறகுஇ ஞானிகள் தங்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டிய நேரம் வந்தது. திரும்பி வந்து குழந்தையை எங்கே கண்டுபிடித்தார்கள் என்று தன்னிடம் சொல்லும்படி ஏரோது அவர்களைக் கேட்டிருந்தான்இ ஆனால் ஏரோதிடம் திரும்பிச் செல்ல வேண்டாம் என்று ஒரு கனவில் தேவன் அவர்களை எச்சரித்தார்இ எனவே அவர்கள் வேறு வழியாக வீட்டிற்குச் சென்றார்கள். (மத்தேயு 2:12) விவாதிக்க - ஞானிகள் வீட்டிற்கு செல்லும் வழியில் எப்படி உணர்ந்தார்கள் என்று நினைக்கிறீர்கள்? வீட்டிற்கு வந்ததும் அவர்கள் என்ன மக்களிடம் சொன்னார்கள் என்று நினைக்கிறீர்கள்? |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். மத்தேயு 2: 11. |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>☐ ஞானிகள் மீண்டும் வானத்தில் என்ன பார்த்தார்கள்?<br>☐ நட்சத்திரத்தைப் பார்த்தபோது அவர்கள் எப்படி உணர்ந்தார்கள்?<br>☐ நட்சத்திரம் அவர்களை எங்கு அழைத்துச் சென்றது?<br>☐ வீட்டில் யார் இருந்தார்கள்?<br>☐ இயேசுவைக் கண்ட ஞானிகள் என்ன செய்தார்கள்?<br>☐ அவர்கள் அவருக்கு எத்தனைப் பரிசுகளை கொடுத்தார்கள்?<br>☐ பரிசுகளில் ஏதாவது ஒன்றின் பெயரைக் குறிப்பிடுங்கள்.<br>☐ ஞானிகள் வேறு வழியில் வீட்டிற்குச் செல்லவேண்டும் என்பதை எப்படி அறிந்தார்கள்? |

B 12 கதை 4

எகிப்துக்கு தப்பிச்செல்லுதல் - இந்தக் கதை தேவன் தம்முடைய குமாரனைக் பாதுகாப்பதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவைப் பாதுகாத்தா<br>* இயேசுஇ மரியாள் மற்றும் யோசேப்பைப் போலவே நாமும் தேவனைப் பிரியப்படுத்த வேண்டும்.<br>**முக்கிய வசனம்: மத்தேயு 2: 15**<br>**வேத பாகம்: மத்தேயு 2: 13-23** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | குழந்தைகளிடம் அவர்கள் கண்ட ஏதாவது கனவுகளை சொல்லச் சொல்லுங்கள்.<br>பைபிள் காலங்களில் கனவுகளுக்கு பெரும்பாலும் சிறப்பு அர்த்தங்கள் இருந்தன என்பதை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். கதையில் இதுவரை அவர்கள் கற்றுக்கொண்ட கனவுகளைப் பற்றி சொல்லச் சொல்லுங்கள் (யோசேப்பின் கனவுஇ ஞானிகளின் கனவு).<br>இன்று நாம் மற்றொரு கனவைப் பற்றி தெரிந்துகொள்ளப்போகிறோம். |
| **கற்றுக்கொடுங்கள்** | * ஞானிகள் சென்ற பிறகுஇ யோசேப்புக்கு இன்னொரு கனவு வந்தது. ஏரோது மிகவும் கோபமடைந்துவிட்டான்இ அவன் இயேசுவைக் கொல்ல முயற்சிக்கிறான் என்று தேவன் யோசேப்புக்கு கனவில் கூறினார். இயேசுவையும் மரியாளையும் அழைத்துச் சென்று எகிப்துக்குத் தப்பிக்க வேண்டும் அப்பொழுது அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று தேவன் யோசேப்பிடம் சொன்னார். (மத்தேயு 2: 13) கலந்துரையாடுங்கள் - இந்த கனவு கண்டபோது யோசேப்பு எப்படி உணர்ந்தார் என்று நினைக்கிறீர்கள்?<br>* மீண்டும்இ யோசேப்பு சொன்னதைச் செய்துஇ அவருடைய குடும்பத்தை எகிப்துக்கு அழைத்துச் சென்றார். ஏரோது ராஜா இறந்துவிட்டான் என்று கேட்கும் வரை அவர்கள் அங்கே சிறிது காலம் தங்கினார்கள். (மத்தேயு 2: 14-15) விவாதிக்கவும் - கனவில் தேவன் சொன்னது போல் யோசேப்பு செய்யாவிட்டால் என்ன நடந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? தேவன் சொன்னபடி யோசேப்பு செய்தது மிகவும் முக்கியமானது. இதை இயேசு பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பைபிள் எவ்வாறு முன்னறிவித்திருந்தது என்பதை குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். இயேசு எகிப்தில் இருப்பதைப் பற்றி மனப்பாட வசனம் எவ்வாறு கூறுகிறது என்பதை விளக்குங்கள் - அது நடப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே ஏரோது என்ன செய்ய முயற்சிப்பார் என்பதை தேவன் அறிந்திருந்தார். நடந்த எல்லாவற்றிலுமிருந்து தேவன் தம்முடைய குமாரனைப் பாதுகாத்து வந்தார்.<br>* ஏரோது இறந்தபோதுஇ யோசேப்பும் மரியாளும் இயேசுவும் திரும்பிவந்து நாசரேத் என்ற ஒரு நகரத்தில் வசிக்கச் சென்றார்கள் . (மத்தேயு 2: 19-23) இயேசு நாசரேத்தில் வளர்ந்து வரும்போதுஇ அவர் எப்போதும் அவருடைய குடும்பத்தினரையும்இ அயலார்களையும்இ மிக முக்கியமாக அவருடைய பிதாவாகிய தேவனையும் பிரியப்படுத்தினார் என்று குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். அவரைப் பிரியப்படுத்தும் காரியங்களையும் நாம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். அவரைப் பிரியப்படுத்த நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த காரியம் என்னவென்றால்இ இயேசுவை நம்முடைய இரட்சகராக அனுப்பியதற்காக நன்றி சொல்வது. |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். மத்தேயு 2:15. |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>☐ ஞானிகள் சென்ற பிறகு யோசேப்புக்கு என்ன நடந்தது?<br>☐ தேவன் யோசேப்பை எங்கே போகச் சொன்னார்?<br>☐ அவர் ஏன் அங்கு செல்ல வேண்டியிருந்தது?<br>☐ யோசேப்பு தன்னுடன் யாரை எகிப்துக்கு அழைத்துச் சென்றார்?<br>☐ அவர்கள் எப்போது மீண்டும் வீடு திரும்பினார்கள்?<br>☐ அவர்கள் எந்த நகரத்தில் வசிக்க சென்றார்கள்?<br>☐ இயேசு நாசரேத்தில் வளர்ந்து கொண்டிருந்தபோது எப்படிப்பட்டவராய் இருந்தார்?<br>☐ தேவனைப் பிரியப்படுத்த நாம் என்ன செய்ய முடியும்? |

பாடங்களுக்கு மதிப்பெண் வழங்குவதில் ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல்

நிலை 1 பாடங்கள்:
 ஒவ்வொரு வாரமும் ஒரு பக்கம் (அல்லது சிறு புத்தகங்களில் இரண்டு) முக்கியமாக ஒரு சிலவற்றில் வண்ணந்தீட்டுதல் மற்றும் சில வார்த்தைகளை நிரப்புதல் ஆகியவை அடங்கும்.
 ஒவ்வொரு வாரமும் 10 மதிப்பெண்கள் அதிகபட்சம் மாதத்திற்கு 40 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன.
 நிலை 1 பாடங்களைப் பெறும் குழந்தைகள் நன்றாகப் படிக்க முடியும் என்று எதிர்பார்க்கவில்லைஇ பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் /தலைவர்கள் அவர்களுக்கு உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.
 ஒரு பதிலுக்கு 2 மதிப்பெண்களையும்இ ஒவ்வொரு பாடத்திற்கும் வண்ணந்தீட்டுதலுக்கு ஸ்ரீ 10 மதிப்பெண்களையும் ஒதுக்குகிறோம்.

நிலை 2 பாடங்கள்:
 வாரத்திற்கு இரண்டு பக்கங்கள். (4 சிறு புத்தகங்களில்)
 பாடத்திற்குள்ளேயே கதை உள்ளது. மாணவர்கள் பாடத்திலிருந்து பல்வேறு சொற்களைக் கண்டுபிடிக்க வேண்டும்இ சிலவற்றிற்கு வண்ணந்தீட்ட வேண்டும்இ முக்கிய வசனங்களைப் பூர்த்திசெய்ய வேண்டும்.
 பாடங்கள் முற்றிலும் சரியாக இருக்கும்போது ஒவ்வொரு வாரமும் 20 மதிப்பெண்கள்இ அதிகபட்சம் மாதத்திற்கு 80 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன.
பைபிள்டைம் மதிப்பெண் வழங்கும் முறை
மதிப்பெண் வழங்கும்போது கவனிக்கவேண்டியவை
முதலில் இதைச் செய்யும்படி ஆசிரியர்களைக் கேட்கிறோம்:
 வ்வொரு பாடத்தையும் சரிபார்த்துஇ பதில்கள் சரியா அல்லது தவறா என்று குறிக்கவும்.
 அறிவுறுத்தப்பட்டபடி தேவையான புள்ளிகளை வழங்குங்கள்.
 எப்போதும் மாறுபட்ட நிறத்தில் குறிக்கவும்இ ஒவ்வொரு சரியான பதிலையும் டிக் செய்யவும்.
 தேவையான இடத்தில் சரியான பதிலை எழுதுங்கள்இ எழுத்துப்பிழை சரிசெய்யவும்இ இருந்தபோதிலும் இதற்காக மதிப்பெண் குறைப்பதில்லை.
 அரைகுறையான பதில்களுக்கு குறைந்த மதிப்பெண் கொடுங்கள்.
 மாதத்தில் பெற்ற மொத்த மதிப்பெண்களைக் கூட்டிஇ பின் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் அதை எழுதவும்.
மிகவும் தாராளமாக இருப்பது அவசியம் மற்றும் மாணவர்களை அவர்களின் பைபிள் படிப்புடன் ஊக்குவிக்க முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். இது உதவியாக இருக்கும்இ ஒவ்வொரு மாதமும் ஆசிரியர் மாணவருக்கு ஊக்கமளிக்கும் வார்த்தையை எழுத முடியும்இ மேலும் இது செய்ய பாடத் தாளில் ஒரு இடம் ஒதுக்கப்பட்டிகிறது. நல்ல வண்ணந்தீட்டுதல்இ சுத்தமாக வைத்திருத்தல்இ பெற்ற மதிப்பெண்கள்இ பாடத்தைப் பற்றிய மாணவரின் புரிந்துகொள்ளுதல் போன்றவற்றைப் பற்றி கருத்துகளைக் கூறலாம். கருத்துகளை முடிந்தவரை மாறுபட்டதாக வைக்க முயற்சிக்கிறோம். கேள்விகள்இ அறிக்கைகள்இ ஆய்வுக்கருத்துகள்இ ஊக்கங்கள் போன்றவை அனைத்தையும் பயன்படுத்தி மாறுபட்டதாக வைக்கவும். இதற்கு சிந்தனை தேவைஇ ஆனால் மாணவரின் ஆர்வம் குன்றாமல் வைத்திருப்பது முக்கியம். ஒவ்வொரு மாதமும் அதே அறிக்கை அல்லது கேள்வி மீண்டும் மீண்டும் செய்யப்படுமானால்இ அது அதன் தாக்கத்தை இழந்துவிடும்.

நிலை 1
பொதுவான கருத்துகள்
“ஆமி - நீ இந்தப் பாடங்களைத் தொடங்கியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்இ நீ அவற்றை ரசிக்கிறாய் என்று நம்புகிறேன். உனது வண்ணந்தீட்டுதல் எனக்குப் பிடித்திருக்கிறது. நீ பள்ளிக்குச் செல்கிறாயா? அதைப் பற்றி என்னிடம் செல். கூடிய விரைவில் உனது பதிலுக்காக காத்திருக்கிறேன்.”
“நல்லதுஇ ஆண்ட்ரூ. எவ்வளவு அருமையாக வண்ணந்தீட்டியிருக்கிறாய்! வரிகளுக்குள் வண்ணந்தீட்டுவது கடினமாக இருந்ததா? கடைசி பாடத்தில் நீ ஒரு சிறிய வண்ணந்தீட்ட தவறிவிட்டாய்.”
ஆவிக்குரிய கருத்துக்கள்
“நல்லதுஇ சாராள். இயேசு அவனுக்கு உதவி செய்தபோது யவீரு எவ்வளவு மகிழ்ச்சியான மனிதனாய் காணப்பட்டான்.”
“மிக நல்ல பதில்கள்! இயேசு மரிக்கும் கதை சோகமானதுஇ ஆனால் அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்பது மகிழ்ச்சியளிக்கும் விஷயம்.”

நிலை 2

பொதுவான கருத்துகள்
“மீண்டும் நல்ல பதில்கள்இ யோவன்னா - பள்ளியில் உனது ஆசிரியர் உன் பதில்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகிறார் என்று நான் நம்புகிறேன்!”
“உனது பிறந்த நாள் விரைவில் வரவிருக்கிறது என்று நான் காண்கிறேன்இ கோனர். ஏதாவது சிறப்பாக செய்கிறாயா? நீ என்ன செய்தாலும்இ அது உனக்கு ஒரு சிறந்த நாள்!”
“நீ மிகவும் கடினமாக முயற்சிசெய்திருக்கிறாய். சில சிறிய தவறுகள் உள்ளன. ஒவ்வொரு முறையும் உன் பதில்களைச் சரிபார்க்க மறக்காதே.”
ஆவிக்குரிய கருத்துக்கள்
“குழந்தை இயேசு முன்னணையில் இருப்பதை நீ வண்ணந்தீட்டிய விதம் எனக்குப் பிடித்திருக்கிறது. நமக்காக அவரை உலகத்திற்கு அனுப்பியது தேவன் நமக்குச் செய்த நன்மையல்லவா?”
“நீ பயன்படுத்திய வண்ணங்கள் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது! தேவன் சொன்னதை நம்பாததற்காக சகரியா ஒரு விலை கொடுக்க வேண்டியிருந்தது. அவர் பின்னர் ஒருபோதும் தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்கவில்லை.”
“சிறந்த பதில்கள். பிலிப்பை பாலைவனத்தில் சந்தித்தவர் மிகவும் மகிழ்ச்சியாக சென்றார். அவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கேட்டு விசுவாசித்தார்.”

© Bible Educational Services 2023
www.besweb.com